827

PRASCOVIA
THE
BRAVE GIRL

BY

E. N. M. VELU, B.A.,
E. M. BALAMMAL.

K. MUNUSWAMI NAIDU & CO,
PUBLISHERS & BOOK SELLERS
286, ESPLANADE, MADRAS.

All Rights Reserved] [Price 5 As.

TB
O31,6
M31

பிராஸ் கோவியா

அல்லது

பேராற்றல் வாய்ந்த பெண்மணி.

இ. நா. ம. வேலு, B. A.,

இ. ம. பாலம்மாள்,

எழுதியது.

கே. முனுசாமி நாயுடு அண்டு கம்பனி

புத்தக வியாபாரிகள்

286, எஸ்பிளனேட் ரோ, சென்னை.

Printed at
The B. N. Press, Mount Road,
Madras.

முகவுரை.

பிராஸ்கோவியா ஓர் உத்தமப் பெண்; தன் தாய் தந்தையர்மீது அளவில்லாத அன்பு கொண்டவள். அவள் தன் உயிரையும் மதியாமல் கால் நடையாக இரண்டாயிரம் மைல் தூரம் நடந்து சென்று, ருஷிய தேசத்துச் சக்ரவர்த்தியை நேரில் கண்டு பேசினள்; ஸைபீரியாவுக்குத் துரத்தப்பெற்றிருந்த தன் தாய் தந்தையரை விடுவித்தாள். அதனல், அவளுக்கு வழியில் அநேக இடையூறுகள் நேர்ந்தன. கடவுள் அருளால் அவள் அத்துன்பங்களினின்றும் தப்பிப் பிழைத்தாள்.

நமது தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர் அப்பெண்ணின் குண விசேஷங்களைப் பின்பற்றி நடப்பின் நற்கதி அடைவர் என்பது திண்ணம். அது காரணம்பற்றி, அவளுடைய ஜீவிய சரித்திரத்தை எளிய தமிழ் நடையில் எழுதி வெளிப்படுத்தி யிருக்கிறோம்.

கல்வி இலாகா அதிகாரிகள் இச்சிறு நூலை பிரதம பாடசாலை மாணக்கர்களுக்கு உபபாடமாக ஏற்படுத்தி நாங்கள் இத்துறையில் உழைக்க எங்களுக்கு ஊக்கம் அளிப்பாராக!

நாகவிலாசம்,
புரசை
26—8—31.

இ. நா. ம. வேலு, பி.எ.
இ. ம. பாலம்மாள்.



81-ஆம் பக்கம் பார்க்க.

பிராஸ் கோவியா

அல்லது

பேராற்றல் வாய்ந்த பெண்மணி.

அத்தியாயம் 1.

ஸைபீரியா—பூலோக நரகம்.

ஐரோப்பாவில் உள்ள தேசங்கள் அனைத்தினும் பெரியது ருஷிய தேசம் (Russia). இத்தேசத்தின் பாதிக்கு அதிகம் ஐரோப்பாவிலும் (Europe) மூன்றில் ஒரு பாகத்துக்கு அதிகம் ஆசியாவிலும் (Asia) இருக்கின்றன. இது ருஷியருக்குச் சொந்தமானது. ருஷியர் ஐரோப்பியர் இனத்தைச் சேர்ந்தவர்களே. ஸ்வதந்திர ராஜ்யபார முறையை (Absolute Monarchy) அநுசரித்து இவ்விராஜ்ஜியத்தை ருஷிய மன்னர் ஆண்டு வந்தனர். இவர்களுக்கு "ஸார்" (Czar) என்னும் பட்டப் பெயர் உண்டு.

கி. பி. 1917-ஆம் ஆண்டு, மகா ஐரோப்பிய யுத்தம் (The Great European War) நிகழ்ந்து கொண்டு இருக்கையில் ருஷிய தேசத்தில் பெருங்

குழப்பம் ஒன்று ஏற்பட்டது. அக்குழப்பத்தில ருஷிய மன்னர் தமது பதவியை இழந்தனர். அத்தேசத்துப் பிரஜைகள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஸ்வதந்திர ராஜ்ய பார முறைமையை அறவே யொழித்து அங்கும் குடியரசை நிலை நிறுத்தினர்.

இந்தக் கதை ஆரம்பிக்கும் காலத்தில், அதாவது, கிறிஸ்தாப்தம் பதினெண்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ருஷிய தேசத்தில் முதலாம் பவுல் (Paul I) என்னும் சக்ரவர்த்தி அரசியல் நடத்தி வந்தான். அவன் தன் மனம் போன வாறு நடந்தான். அவனுக்குச் சிறிது பைத்தியமும் உண்டு என்ப. அவன் 'தான்பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்று சொல்லக் கூடிய பிடிவாதம் உடையவன். தன் குடிகள்மீது சந்தேகம் கொண்டவன். ஸ்வ தந்திர ராஜ்ய பாரத்தைத் தாங்கி நிற்கும் மன்னருக்குச் சந்தேகம் உண்டாவது சகஜமே யன்றோ?

அவன் அரசு செலுத்திவந்த காலத்தில் சந்தேகத்தின்பேரில் அநேகரைக் குற்றவாளிகள் ஆக்கி அவர்களைத் தீர விசாரிக்காமல் சிறைச்சாலையில் இடுவித்தான்; பலரை ஸைபீரிய நாட்டுக்கு ஓட்டினான். நமது நாட்டில் பெருங் குற்றவாளிகளை ஜீவகால பரியந்தம் அந்தமான் தீவுகளுக்கு (Andaman Islands) அனுப்புவதைப்போல்

ருஷிய தேசத்துக் குற்றவாளிகளை ஸைபீரியாவுக்குத் துரத்தி விடுவது வழக்கம்.

ஏறக்குறைய முந்நூறு நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் ருஷியர், உரோமம் அடர்ந்த பிராணிகளை வேட்டமாட விரும்பி அவைகள் வசித்துவந்த ஸைபீரிய நாட்டைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டனர். ஆசியாவுக்கு வடக்கில் உள்ள இப்பிரதேசத்தில் மரங்கள் அடர்ந்த காடுகள் உண்டு. இத்தேசத்தில் குளிர் அதிகம். இது சதுப்பு நிலங்கள் நிறைந்தது. அக்காலத்தில் இங்கு வசித்துவந்த சொற்ப ஜனங்களை ஆற்றோரங்களில் மரக்குடிசைகளில் தங்கியிருப்பதைக் காணலாம். மீன் பிடித்தலும், மிருகங்கள் மேய்த்தலும், வேட்டம் ஆடுதலும், அவர்களுக்கு முக்கிய தொழிலாம்.

ஒரு வருஷத்தில் ஒன்பது மாத காலம் இப்பிரதேசத்தில் பூமியின்மீது பனி உறைந்திருக்கும். மாரிக்காலத்தில் சில வாரங்களில் இங்குச் சூரியன் உதிப்பதேயில்லை. பூலோக நரகம் என விளங்கும் இப்பிரதேசத்திற்குத் துரத்தப் பெறும் குற்றவாளிகள் உண்ண உணவும் உடுக்க உடையும் இல்லாமல் குளிரால் நடுங்கிப் பெரிதும் வருந்துவார். இவ் வருத்தத்துடன், அக் குற்றவாளிகள் நாள் முழுவதும் ஓயாமல் சுரங்கங்களில் உழைத்த வண்ணம் இருப்பர்.

ருஷிய ராஜாங்கத்தார் குற்றவாளிகளைத் தனியே ஸைபீரியாவுக்கு அனுப்புவது இல்லை. ஐம்பது அறுபது குற்றவாளிகளை ஒன்றுசேர்த்து அவர்களுக்குக் கைவிலங்கு இட்டு, ஆடுமாடுகளை மந்தை மந்தையாய் ஓட்டிக்கொண்டு போவதைப் போல் சவுக்கடியுடன் ருஷிய நாட்டுப் போலீஸ் வீரர் குதிரைகள்மீது ஏறிக்கொண்டு அவர்களை ஸைபீரியாவுக்குத் துரத்திச்செல்வர்.

ஆனால், ராஜரிக விஷயங்களில் சம்மந்தப் பட்ட குற்றவாளிகளை அவர்கள் அவ்விதம் நடத் துவதில்லை. அக் குற்றவாளிகள் தங்கள் மனைவி மக்களை ஸைபீரியாவுக்கு அழைத்துக்கொண்டு போக அவர்களுக்கு அனுமதியுண்டு. அவர்கள் சுரங்கங்களில் வருந்தி உழைக்க வேண்டியது இல்லை. அவர்களுடைய ஜீவனத்திற்காக ராஜாங் கத்தார் வாரத்துக்கு ஒருமுறை சொற்ப தொகை கொடுத்து வருவார்கள். அத் தொகை அவர்களுக் குப் போதாவிடில் அவர்கள் தங்களுக்கு இஷ்ட மான வேலை செய்து பொருள் சம்பாதித்துக் கொள்ளலாம். அவர்கள் வேட்டையாடி மிருகங் களைக் கொன்று அவற்றின் மாமிசத்தை உண்டு பசி ஆற்றிக் கொள்ளலாம்; அல்லது, தங்களுக் குப் பிரியமான நிலத்தைச் சொந்தமாக உழுது பயிரிட்டு ஜீவிக்கலாம்.

அத்தியாயம் 2.

வீண் பழி.

மேல் அத்தியாயத்தில் கூறிய முதலாம் பவுல் என்னும் ஸார் ருஷியாவில் அரசு செலுத்தி வந்த போது, அத் தேசத்துப் படைத் தலைவருள் தலைமை பெற்று விளங்கியவன் லோ பவுலாப் (Lopouloff) என்பவன். அவன் வென்றி மறஞ் சிறந்த வீரன். போரில் புறங்கொடாத தீரன். ராஜ விசுவாசத்தில் நிகரற்றவன். தேச பக்தி மிகுந்தவன். பிறர் துன்பப்படுவதைக் காண மனம் சகியாதவன். தன் உதவியை நாடி வருகிறவர்களுக்கு அவன் தன்னால் கூடிய சகாயம் செய்வதில் தளராத ஊக்கம் உடையவன்.

இத்தகைய குண விசேஷங்கள் பொருந்தப் பெற்ற லோ பவுலாப் தளகர்த்தன் நாளுக்கு நாள் மேன்மை அடைந்து வந்தான். அவன் தன் மனத்திற்கு உகந்த மாது சிரோமணி ஒருத்தியை மணம் புரிந்துகொண்டு அவளுடன் நல்லறமாம் இல்லறத்தைச் சரிவர நடத்தி வந்தான்.

அம் மடந்தை நல்லாள் மகா உத்தமி. நற்குடியில் பிறந்தவள். கடவுள் பக்தி உடையவள். எப்போதும் அவள் முகத்தில் புன்னகை தவழ்ந்த வண்ணம் இருக்கும். அவள் எவரையும் கடிந்து

பேசுவது இல்லை. அவள் தன் புருஷன்மீது அளவில்லாத அன்பு பூண்டு ஒழுகினாள். எல்லா விஷயங்களிலும் அவள் அவன் மனங்கோணாத படி நடந்து வந்தாள்.

விவாகம் ஆன மறு வருஷம் அவள் பெண் மகவு ஒன்றைப் பெற்று எடுத்தாள்.

*　　　*　　　*

ருஷிய தேசத்துப் பிரபுக்கள் டலர் லோ பவுலாப்பின் உன்னத நிலைமையைக் கண்டு பொறாமை உற்றனர். பொறாமை என்னும் பேய் உலவாத இடம் எங்கே இருக்கிறது? அவர்கள் அவனை எவ்விதத்திலாகிலும் கெடுத்துவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்கள். அப் பிரபுக்களுள் அநேகர் முதலாம் பவுலிடம் நெருங்கிப் பழகும் அந்தஸ்து உடையவர்கள். அதனால், அவர்கள் சமயம் நேர்ந்தபோதெல்லாம் அரசனிடம் அவனைக் குறித்து இல்லதும் பொல்லதும் கூறுவதே தொழிலாகக் கொண்டார்கள்.

ஒரு நாள், இச் சதியாலோசனைக்காரருள் ஒருவன், காலப் போக்கின் நிமித்தம் அரண்மனையின் உத்தியான வனத்தில் உலாவிக் கொண்டிருந்த ருஷிய அரசனை அணுகி, "மன்னர் மன்ன! இனி நாம் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்," என்றான்.

ருஷிய மன்னன் :—ஏன் ? என்றைக்கும் இல்லாமல் நீ இன்றைத் தினம் இவ்வாறு கூறுவானேன்.

பிரபு:—அதற்குக் காரணம் உண்டு.

ரு. மன்னன் :—என்ன காரணம் ?

பிரபு:—தாங்கள் பூரணமாய் நம்பியிருக்கும் லோ பவுலாப் தளகர்த்தன் ராஜத் துரோகி எனத் தகுந்தவன். தேவரீருடைய ஸ்வதந்திர ராஜ்ய பார முறைமையை அடியோடு தொலைக்கக் கங்கணம் கட்டிக் கொண்டுள்ள சதியாலோசனைக் காரர் பலர் நள்ளிரவில் அடிக்கடி இத் தலை நகரத் துக்கு வெகு தூரத்தில் கூட்டங் கூடுகிறார்கள் என்றும் அக் கூட்டங்களில் லோ பவுலாப் முதன் மையாய் இருக்கிறான் என்றும் நான் நேற்றைத் தினம் கேள்விப்பட்டேன்.

ரு. மன்னர் :— அப்படியா ?

பிரபு:—ஆம், அரசே !

* * *

இவ்வாறு லோபவுலாப் மீது அழுக்காறு கொண்டுள்ள பிரபுக்கள் அவனை அரசன் முன் அவ்வப்போது நிந்தித்துப் பேசலாயினர். 'கரைப் பார் கரைத்தால் கல்லும் கரையும்' என்பது உண்மை வாக்கன்றோ ! நாளடைவில் முதலாம் பவுல் - பித்தம் பிடித்த ஸார் - லோ பவுலாப் சேனை

பதியிடம் சந்தேகங் கொண்டான். அவனோடு முகங்கொடுத்துப் பேசுவதைத் தவிர்த்தான்.

லோ பவுலாப் புத்தி சாதுர்ய முடையவன். ஆனதால், அரசன் மனம் மாறுபாடு அடைந்து இருப்பதை உணர்ந்தான். அதற்குக் காரணம் யாதென்று அவனுக்குத் தெரியவில்லை. அதைப் பற்றிப் பலமுறை யோசித்தான். அரசனுடைய உள்ளக் கருத்தை அறிந்து கொள்ளப் பெரிதும் முயன்றான். அவன் முயற்சி பயன் இல்லாது போயிற்று.

ஒரு நாள் அவன் இவ்விஷயத்தைத் தன் பெண்சாதிக்குத் தெரிவித்தான். சிற்சில சமயங்களில் புருஷனுக்கு மந்திரியாய் இருக்கத் தகுந்தவள் மனைவி அல்லளோ!

அவன் கூறியவற்றை வெகு விநயத்துடன் செவி சாய்த்துக் கேட்டுக் கொண்டிருந்த மனைவி, "அன்பரே! நமக்கு ஏதோ ஆபத்து நேரிடும் போல் இருக்கிறது. உம்முடைய விஷயத்தில் அரசன் அவ்விதம் நடந்து கொள்வதற்குக் காரணம் யாதாயினும் இருக்கலாம். காரணம் இல்லாக் காரியம் இல்லை.

லோ பவுலாப்:—காரணம் யாது என எனக்குப் புலப்படவில்லையே.

மனைவி :—எச்சமயத்திலாகிலும் நீர் நமது மன்னரைப் பற்றி எவரிடத்திலாவது சலிப்புடன் பேசி இருக்கின்றீரா.

லோ பவுலாப்:—இல்லை, இல்லை! எனக்கு இதுவரையில் நன்மையே செய்து வந்த அவர் மீதும் நான் சலிப்படைவேனே!

மனைவி:—உமக்கு விரோதிகள் உளரோ?

லோ பவுலாப்:—எவரும் இலர்.

மனைவி:—பகைவர் இலர் என்று நீங்கள் உறுதியாகச் சொல்லக்கூடுமோ?

லோ பவுலாப் மௌனம் சாதித்த வண்ணம் தலை குனிந்து யாதோ யோசித்தான். அவன் அவ்விதம் ஆலோசனை செய்து கொண்டு இருப்பதைக் கண்ட அவனுடைய மனைவியும் சிறிது நேரம் பேச்சொழிந்து இருந்தாள்.

சில நிமிஷங்கள் சென்றன.

லோ பவுலாப்:—நான் எவருக்குத் தீங்கு இழைத்தேன். நான் பிள்ளையாய்ப் பிறந்து இது வரையில் எவரையும் கடிந்து பேசினது இல்லை; எவருக்கும் கெடுதி செய்ததும் இல்லை.

மனைவி:—நீங்கள் யாவருக்கும் நன்மையே புரிந்திருக்கலாம்; எல்லாரிடத்திலும் நட்புரிமை கொண்டு நடந்து வரலாம். ஆயினும், நீர் நமது மன்னனுடைய நன்மதிப்பைப் பெற்றிருப்பதே உமக்கு அநேக பகைவரை உண்டாக்கவல்லது. உமது நண்பரும் உம்முடைய உயர்ந்த பதவியைக் கண்டு பொருமை யுறுவர். அவ்விதம் உம்மீது பொருமை கொண்டுள்ள நண்பர் அனைவரும்

உமக்குப் பகைவரே யாவர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி அன்றோ! அவர்களும் உம்மீது ஏற்பட்டு இருக்கும் பகைமையை நீங்கள் அறிந்து கொள்ள முடியுமோ. நீர் ஆழத்தைக் காணலாம்; நெஞ்சாழத்தைக் காண வல்லார் யார்? அத்தகைய பொருமைக்காரர் உம்மைப்பற்றி அரசனிடம்—மதிகெட்ட நம் மன்னனிடம்—பொய்க் கதைகள் கட்டி உமக்கும் அவனுக்கும் மித்திர பேதம் உண்டாக்கி இருப்பினும் இருப்பர், என்று நான் நினைக்கிறேன்.

லோ பவுலாப்:—நீ சொல்வதும் உண்மையாய் இருக்கலாம்.

மனைவி:—நாதா! மோசம் நிறைந்தது இவ்வுலகம். இப் பொல்லாத உலகத்தில் நாம் வெகு ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ள வேண்டியது அவசியம்.

லோ பவுலாப், "ஆம். நீ உலகானுபவம் நிறைந்த கிழவியைப்போல் பேசுகிறாயே" என்று அன்பின்மிகுதியால் அவள் கன்னத்தைத் தடவிக் கொடுத்து, "அஃதிருக்கட்டும். இப்போது அரசன் என்மீது கொண்டுள்ள கோபத்தை நான் எவ்விதம் ஆற்றுவது?" என்றான்.

மனைவி:—நம்மால் ஆவது ஒன்றும் இல்லை. யாவும் ஈசன் செயல்! நாம் கடவுள்மீது பாரத்தைப் போட்டு அவரை அல்லும் பகலும் இடை

விடாது தியானம் செய்த வண்ணம் இருக்க வேண்டும். நமது கடமையைச் செய்து முடிப்ப தில் நாம் தவறுதல் கூடாது.

* * *

இவ்விதம் சதிபதிகள் இருவரும் உரையாடிக் கொண்டு இருந்தனர். தொட்டிலில் குழந்தையின் அழுகை யொலி கேட்டது. அவ்விருவரும் குழந்தை தூங்கிக் கொண்டிருந்த தொட்டில் அண்டைச் சென்றனர்.

லோ பவுலாப் தன் பெண் குழந்தை பிராஸ் கோவியா (Prascovia) வைக் கையில் ஏந்திக் கொண்டு அதன் கள்ளங் கபடற்ற முகத்தைக் கூர்ந்து கவனித்தான். அரசனுக்குத் தன் மீதிருக் கும் ஆக்கிரகத்தை அறவே மறந்தான். மழலைச் சொல்லுடைய மக்களின் முகத்தைக் காண்பதே மனக் கவலையை மாற்றும் நன் மருந்தென்பதை எவரும் அறிவர்.

* * *

அத்தியாயம் 3.

விதிப் பயன்.

மூன்று வருஷங்கள் சென்றன.

லோ பவுலாப்பின் இல்லற வாழ்க்கையின் அமைதி குலையும் சமயம் நெருங்கியது. முதலாம் பவுல் அவனிடம் முன்னிலும் அதிக கடுகடுப்

புடன் பேசத் தலைப்பட்டான். அரசனுக்கு அவன்மீது இருந்த சந்தேகம் நாளுக்கு நாள் பலப்பட்டுக் கொண்டே வந்தது. ஆயினும், அவன் அரசனுடைய கோபத்துக்கு அஞ்சவே இல்லை. வருவது வரட்டும் என்று அவன் தைரியமாக இருந்தான். மேலும், பூர்வ புண்ணிய வசத்தால் அவனுக்குக் கிடைத்த மனைவி நற்குண சீலியாய் இருந்தமையாலும், அவனுக்கு அவள் வயிற்றில் பிறந்த பெண் குழந்தை பிராஸ்கோவியாவின் தளர் நடையையும் குதலை மொழியையும் குறு முறுவலையும் முகவனப்பையும் அவன் கண்டு களிப்படைந்தமையாலும் அரசன் தன்மீது சீற்றம் அடைந்திருப்பதையும் அவன் மறக்கலாயினன். அவன் மறந்தாலும், பொய்யுரைகளாம் கள் அருந்திக் கோப வெறி கொண்டு இருந்த அரசன் அவனை எவ்வாறு தொலைப்பது என்று வழி பார்த்திருந்தான்.

எவரும் அஞ்சி நடுங்கத்தக்க வல்லமை வாய்ந்த ருஷிய மன்னனாகிய முதலாம் பவுலுக்கு ஒரு தளகர்த்தனைத் தொலைப்பது அருமையோ? அவன் நாவசைந்தால் நாடு அசையும் என்பதும் பொய்யோ?

லோ பவுலாப் சாமானிய தளகர்த்தன் அல்லன். ருஷிய தேசத்துச் சேனுவீரர் அனைவரும் அவனைத் தம்முயிரினும் மேலாகப் பாவித்தனர்;

அரசன் அவனுக்குத் தீங்கு செய்தால் அவர்கள் அக்கணமே அவன் சிரசைக் கொய்து விடுவார்கள்; அவனுக்கு அநுகூலமாய் இருக்கும் அரசாங்க உத்தியோகஸ்தரையும் அவர்களுடைய குடும்பத்தாரையும் வெட்டி வீழ்த்தி அவர்கள் வசித்து வரும் மாடமாளிகைகளைத் தீக்கிரையாக்குவார்கள்.

முதலாம் பவுல் பைத்தியக்காரனுய் இருந்தும் இவ்விஷயங்களை நன்ருய் உணர்ந்து இருந்தான். அதனுல், அவன் லோ பவுலாப்பை வெகு எளிதில் தொலைக்கக் கூடவில்லை.

* * *

ஒரு நாள் நள்ளிரவில் ஆகாய முழுவதும் இருள் கவிந்து கொண்டு இருந்தது. ஊர் அடங்கிற்று. அப்போது முதலாம் பவுலின் மெய்காப்பாளர் அறுவர் வாள் ஏந்திய கையினராய் அரண்மனையை விட்டுக் கிளம்பினர். லோ பவுலாப் வசித்து வந்த மாளிகையை நோக்கி நடந்தனர். அவர்கள் மூலைக்கு ஒருவராய்ச் சென்றனர். சிறிது நேரத்திற்குள் அவர்கள் நாடிச் சென்ற மாளிகையை நெருங்கினர். ஒன்று சேர்ந்தனர். ஆயினும், அவர்கள் ஒருவரோடு ஒருவர் வார்த்தையாடவில்லை.

ஓசை அவிந்திருந்தது. அம் மாளிகையை அடைந்ததும் அறுவருள் ஒருவன் பைய நடந்து

சென்று சாத்தப்பெற்றிருந்த அந்த மாளிகையின் கதவைத் தட்டினுன். அண்டை அயலில் இருப்பவர் காதில் விழாதபடி மெதுவாகத் தட்டினுன்.

மாளிகையுள் இருப்பவர் அயர்ந்து நித்திரை செய்துகொண்டு இருந்ததால் கதவைத் தட்டுவதை எவரும் அறிந்திலர்.

முதல் தட்டினவன் மறுபடியும் தட்டினுன். "யார் அது" என்று உள்ளிருந்து குரல் எழும்பிற்று. அக் குரல் கேட்டதும் அவன் மற்ருெரு முறையும் தட்டினுன். மூடப்பெற்றிருந்த கதவை நோக்கி எவரோ வருகிற காலடியோசை கேட்டது.

ஒரு நிமிஷம் சென்றது. கதவு படீரென்று திறக்கப்பெற்றது. நித்திரை நீங்காத முகத்துடன் கையில் விளக்கு ஒன்று ஏந்திய பணிப்பெண் தன் தலையை நீட்டி, "இந்த நடுச் சாமத்தில் கதவைத் தட்டுவது யார்?" என்ருள்.

கதவைத் தட்டினவன்:—ஸார் இடமிருந்து வந்திருக்கிறேன்.

பணிப்பெண்:—என்ன விசேஷம்?

கதவைத் தட்டினவன்:—லோ பவுலாப் தளகர்த்தரைக் காணவேண்டும்.

பணிப்பெண்:—அவர் அயர்ந்து நித்திரை செய்கிருரே!

கதவைத் தட்டினவன்:—அவரை இப்போது நான் அவசியம் பார்க்கவேண்டும்.

பணிப்பெண்:— அவரை நாளையதினம் பார்க்கக் கூடாதோ ?

கதவைத் தட்டினவன் :—இல்லை இல்லை. வெகு அவசரமான காரியம்.

பணிப்பெண், "அப்படியானால், அவரை எழுப்புகிறேன்" என்று கூறி உள்ளே விரைந்து சென்றாள்.

பத்து நிமிஷங்கள் பறந்தன.

லோ பவுலாப் உள்ளிருந்து வெகு அவசரத்துடன் வெளியில் வந்தான். அங்கு ஒருங்கு கூடி நின்றிருந்த அரசனுடைய மெய்காப்பாளர் அவனை நோக்கி, "உம்மை 'ஸார்' கையோடு அழைத்துவர ஆஞ்ஞாபித்தார்" என்று விநயத்துடன் கூறினர்.

லோ பவுலாப் "அப்படியே! இதோ வந்து விட்டேன்" என்று அம் மெய்காப்பாளரை பின் தொடர்ந்தான். அவன் மனைவிக்கு அவ்விஷயம் ஒன்றும் தெரியாது. அவள் மாளிகையை விட்டுக் கிளம்பிய பிறகு பணிப்பெண் கதவை மூடித் தாளிட்டுக்கொண்டாள்.

* * *

லோ பவுலாப் அரசனுடைய மெய் காப்பாளருடன் சென்று அரைமணி நேரத்திற்குள் அரண்மனையை அடைந்தான். அங்குக் கொலு மண்டபத்தில் நித்திரை நீத்து அவனை "ஸார்" எதிர்

பார்த்துக் கொண்டிருந்தான். அரண்மனையை அடைந்த தளகர்த்தன் அரசனைக் காண வெகு அவசரமாகக் கொலு மண்டபத்தை நோக்கி நடந்தான். அம்மண்டபத்தின் நடுவில் சிம்மாசனத்தில் வீற்றிருந்த "ஸாரை"க் கண்டு முழங்காற் படியிட்டு வணங்கி, "மன்னர் மன்ன! அடியேனை அழைத்ததன் காரணம் யாதோ?" என்றான்.

அவ் வணக்க மொழிகளைக் கேட்ட ஸார் தன் முகத்தைச் சுளித்துக்கொண்டு பதில் ஒன்றும் பேசாமல் வாளா விருந்தான். அவன் முகத்தில் கோபக் குறி தோன்றிற்று.

அக் காட்சியைக் கண்ணுற்ற வளவில் லோ பவுலாப் உள்ளத்தில் திகில் புகுந்தது. அவன் இடியுண்ட நாகம்போல் நடு நடுங்கினான். தனக்கு என்ன ஆபத்து நேரிடுமோ என்று அஞ்சினான். கடவுளை நோக்கித் தன் மனத்துள்ளே துதிக்க ஆரம்பித்தான்.

சில நிமிஷங்கள் சென்றன.

முழங்காற் படியிட்ட நிலைமையினின்றும் பெயராத லோ பவுலாப்பை 'ஸார்' வெகு அலட்சியமுடன் நோக்கி, "தளகர்த்தரே! நான் உம்மை நம்பினேன்; நீர் என்னைக் கெடுக்க முயற்சி செய்து வருகிறீர். இது உமக்கு நியாயம் எனத் தோன்றுகிறதோ? நீர் இனிமேல் இந்நாட்டில் இருப்பது தகாது. உம்மைச் சுயேச்சையாய் இருக்கவும்

விடக் கூடாது. உம்மால் என் உயிருக்கு ஆபத்து நேரிடும். என் தேசம் சீர் குலைந்து போகும். இவ்விஷயத்தை உமக்குத் தெரிவித்து எவரும் அறியாத வண்ணம் உம்மை இன்றிரவே ஸைபீரியாவுக்குக் கைதியாக அனுப்ப நிர்ணயித்து விட்டேன். ருஷிய ராஜாங்கத்தில் நீர் வகித்திருக்கும் பதவியை உத்தேசித்து உமது மனைவியையும் குழந்தையையும் உம்முடன் அனுப்பவும் உம்முடைய ஜீவனோபாயத்திற்குப் பிரதி தினமும் பத்து கோபெக்ஸ் (Kopeks) கொடுக்கவும் கட்டளை யிட்டிருக்கிறேன்" என்று சொல்லி அவன் கட்டளையை எதிர்பார்த்த வண்ணம் ஓர் ஒதுக்கிடத்தில் நின்று கொண்டிருந்த மெய்காப்பாளரை விளித்து, "சேவகர்காள்! நீங்கள் காலந் தாழ்த்தாமல் இவரை அழைத்துக்கொண்டு ஸைபீரியாவுக்குப் புறப்படுங்கள்." என்று ஆஞ்ஞாபித்தான்.

இதுகாறும் முழங்காற்படி யிட்டபடியே தலை குனிந்திருந்த லோ பவுலாப் நெடு மூச்செறிந்த வண்ணம் எழுந்து நின்று, 'மன்னர் மன்ன! அடியேன் நிரபராதி. இதுகாறும் நான் தேவரீருக்குத் தீங்கிழைக்கக் கனவிலும் கருதவில்லை. நான் இப்பெருந் தண்டனைக்கு அருகன் அல்லேன். தீர விசாரிப்பின் உண்மை வெளியாகும். தேவரீர் பொறாமைக்காரரின் பொய் வார்த்தை

கோபெக்ஸ்—ருஷிய நாணயம்.

களைப் பூரணமாய் நம்பி இன்பம் நிறைந்ததும் குற்றம் அற்றதுமான என் வாழ்க்கையை வீணே கெடுத்துவிட்டீர். யாவும் ஈசன்செயல்!" என்றான்.

அரசன் மௌனம் சாதித்தான்; அங்கு நின்றிருந்த மெய் காப்பாளருக்குக் கண் சமிக்கை செய்தான். அவர்கள் லோ பவுலாப்பை அழைத்துக்கொண்டு கொலு மண்டபத்தை விட்டு வெளியேறினர்.

* * *

அத்தியாயம் 4.

மனைவியின் மன வருத்தம்.

அவர்கள் வெளியிற் சென்ற பிறகு முதலாம் பவுல் மன்னன் இன்னும் இரண்டு போர்வீரரை வரவழைத்து அவர்களைப் பார்த்து, "வீரர்களே! நீங்கள் இருவரும் இக்கணமே புறப்பட்டு லோ பவுலாப் மாளிகைக்குச் சென்று தூங்கிக் கொண்டிருக்கும் அவர் மனைவியையும் குழந்தையையும் எழுப்பி, நான் அத்தளகர்த்தரின்மீது சந்தேகங் கொண்டு அவருக்கு விதித்த தண்டனையைத் தெரிவித்து, அவர்களையும் வேறு மார்க்கமாக ஸைபீரியாவுக்கு அழைத்துக்கொண்டுபோய் அச்சேனாபதியிடம் சேர்ப்பித்து விடவேண்டியது. அவர் மனைவி என்னிடம் முறையிட விரும்புவாள்.

அவளுடைய விருப்பத்திற்கு நீங்கள் சிறிதும் இடங் கொடுக்கலாகாது. அவளுடைய இஷ்டத்திற்கு நீங்கள் இசைந்து அவளை அரண்மனைக்குக் கொண்டுவந்தால் அநர்த்தம் நேரிடும். ஜாக்கிரதை! ஜாக்கிரதை!—" என்றான்.

* * *

அவ்விருவரும் அரசனுடைய கட்டளைப் படியே அரண்மனையை விட்டு வெளிப்போந்து லோ பவுலாப் மாளிகையை நோக்கி விரைந்து நடக்கலாயினர்.

இது நிற்க,

லோ பவுலாப் அரசன் ஆஞ்ஞையின்பேரில் அரண்மனைக்குப்போன செய்தியைப் பணிப் பெண் மூலமாய் அறிந்துகொண்ட அவன் மனைவி படுக்கையை விட்டு எழுந்து என்னவோ ஏதோ என்று ஏங்கிய மனத்துடன் தன் கண்களில் நீர் ஆறாய்ப் பெருகியோட முழுமுதற் கடவுளை நோக்கித் துதித்துக்கொண்டு இருந்தாள்.

ஒரு மணி நேரம் சென்றும் தன் கணவன் திரும்பி வராதது கண்டு அவளுடைய உள்ளம் பதைபதைத்தது; உடல் நடுங்கிற்று. "ராஜ விசுவாசமும் தேச பக்தியும் ஒருங்கே அமையப் பெற்றுத் தமது கடமைகளைச் சரிவர நடத்திவரும் என் பத்தாவுக்கு வீண்பழி நேர வேண்டுமோ. அவருடைய குணாதிசயங்களை நன்குணர்ந்த

"ஸார்" தீர விசாரியாமல் அவர்மீது சந்தேகங் கொள்வானேன்......" என்று தனக்குள் தானே யோசித்துக் கொண்டிருக்கையில் மாளிகையின் வெளிக்கதவை எவரோ தட்டும் சப்தம்கேட்டது.

அப் பதிவிரதா சிரோமணி தன் கணவன் கதவைத் தட்டுவதாகக் கருதி ஒடோடியும் சென்று மிக்க ஆவலுடன் கதவின் தாளை நீக்கினுள். வெளியில் போர்வீரர் இருவர் நிற்பதைக் கண் டாள். தளகர்த்தனுக்கு வாழ்க்கைப்பட்ட அவள் தன் தைரியத்தைக் கைவிடாமல், "ஐயன்மீர்! நீவிர் யாவர்? பேயும் கண்ணுறங்கும் இவ்வேளை யில் இங்கு வருவானேன்?" என்ருள்.

அரசன் அனுப்பிய அவ்விரு வீரருள் ஒரு வன், "அம்மா! நாங்கள் ருஷிய தேசத்துத் தள கர்த்தரின் மனைவியைக் காணவந்தோம். அவர் எங்கிருக்கிருர்?" என்று வினவினன்.

மனைவி, "அவர் மனைவி நான்தான். நான் செய்யவேண்டுவது யாது?" என்ருள்.

அவர்கள் அரசன் கூறிய மொழிகளை அவ ளுடைய செவியில் புகட்டினர். அது அவளுக்கு நாராசம் காய்ச்சி விட்டதுபோல் இருந்தது.

பெண்பிள்ளை என்ன செய்வாள். பாவம்! அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவள் அடியற்ற மரம்போல் தரையில் சாய்ந்தாள். மூர்ச் சையாயினள். அதை யறிந்த அவளுடைய

பணிப் பெண் ஓடி வந்து அவளுக்குச் செய்ய வேண்டிய சைத்யோபசாரங்கள் செய்தாள். போர் வீரர் இருவரும் அவ்விடத்தை விட்டு அசையா மல் நின்று கொண்டிருந்தனர்.

அரைமணி நேரம் சென்றது. அவள் மூர்ச்சை தெளிந்து எழுந்து உட்காந்தாள். "நாத! நாத! உமக்கும் இக்கதி வாய்க்க வேண்டுமோ. இன்பமே அநுபவிக்கக்கூடிய இவ்விள வயதில் நீர் இன்னலுக்கு இலக்காவதைக் காண என் மனம் சகிக்கவில்லையே." என்ருள். பெருமூச்சு விட்டாள்.

அவள் தன் எதிரில் நின்ற வீரரை நோக்கி, "ஐயன்மீர்! நானும் என் குழந்தையும் வைபீரி யாவுக்கு உங்களைத் தொடர்ந்து செல்லத் தடை யில்லை. ஆனுல், அதற்குமுன் நான் நமது அரச ராம் "ஸாரை"க் கண்டு பேச விரும்புகிறேன். அவ்விருப்பத்துக்கு நீங்கள் இசைய வேண்டும்." என்று கெஞ்சினுள்.

போர் வீரர் :— அது முடியாத காரியம். கால தாமதம் செய்யவேண்டா. குழந்தையைத் தூக்கிக் கொண்டு புறப்படுங்கள்.

தளகர்த்தன் பெண்சாதி ஒன்றும் பேசவில்லை. அவளும் பணிப் பெண்ணும் தேம்பித் தேம்பி அழுதனர்.

* * *

அம் மாதரசி தன் பெண் குழந்தையைத் தோள்மீது போட்டுக்கொண்டு அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இருந்த பணிப் பெண்ணுக்குத் தேறுதல் சொல்லி விட்டு யமகிங்கரர் அனைய இரு போர்வீரரைப் பின் தொடர்ந்து சென்றாள்.

* * *

அவள் தன் பெண் மகவுடன் வெளியிற் செல்லப் புறப்பட்டதும் அரசன் உத்தரவின் பேரில் அங்கு நெடுநேரம் காத்துக் கொண்டிருந்த அரசாங்க உத்தியோகஸ்தன் ஒருவன் அம்மாளி கையைப் பூட்டி முத்திரை யிட்டான்.

* * *

தளகர்த்தனுக்கு விதித்த தண்டனையைப் பற்றிய விவரங்களை அவனுடைய பணிப் பெண் அறிந்திருக்கிறாள் என்பதை ஒற்றர் மூலமாய்த் தெரிந்துகொண்ட "ஸார்" அவளைத் தன் முன் வரவழைத்து அவளுக்குப் பொருள் உதவி செய்து அவ்விவரங்களை எவருக்கும் வெளிப்படுத்தாமல் இருக்கவும், அக்கணமே ருஷிய தேசத்தை விட்டுப் போய்விடவும் கட்டளை யிட்டான்.

* * *

அதுவேயுமன்றி அவ்வரசன், லோ பவுலாப் இராஜாங்க விஷயமாகத் தன் மனைவி மக்களுடன் வெளி நாடுகளுக்குப்போய் இருப்பதாகப் பொய் வதந்தி பரப்பினான். அதனால், அவ்வுத்

தம தளகர்த்தனுக்கு நேர்ந்த கதியை ருஷிய தேசத்தார் அறியக் கூடவில்லை.

மதிகேடனாகிய அம்மன்னன் அந்த நிரபராதியான சேனாபதியைக் குறித்துத் தீரவிசாரித்து உண்மையை அறிய வேண்டுமென்று அவாக் கொள்ளவில்லை. அவனை அவ்விதம் செய்யத் தூண்டுவார் எவரும் இலராயினர்.

அத்தியாயம் 5.

பிராஸ் கோவியர்வின் இளம் பிராயம்

* * *

தளகர்த்தனும் அவன் மனைவியும் மூன்று பிராயமுள்ள பெண் குழந்தையும், சைபீரிய நாட்டுத் தலைநகரமாகிய டொபால்ஸ்க் (Tobolsk) குக்கு வடக்கே வெகு தூரத்தில் இருந்த இஷிம் (Ischim) கிராமத்தில் வசித்து வந்தார்கள். "ஸார்" உத்தரவின்பேரில் தங்களுக்குக் கொடுக்கப்பெற்ற பத்துக்கோபெக்கைக்கொண்டு அவர்கள் கஷ்ட ஜீவனம் செய்து வந்தார்கள்.

இதுகாறும் நகத்தின்மீது அழுக்குப் படாமல் வாழ்ந்து வந்த அத்தளகர்த்தன் மனைவி வெகு விருப்பத்துடன் வீட்டு வேலைகளைச் செய்து வந்தாள். தன் புருஷனுக்கு உரிய பணிவிடைகள் செய்வதில் அவள் தளரவில்லை. அவள்

உத்தமி ஆனதால் தன் பழைய நிலைமையை நினைத்து மனம் நொந்திலள்.

பிராஸ்கோவியாவுக்கு ஏழெட்டு வயது ஆயிற்று. அச் சிறுமி சமையற் தொழிலில் கைதேர்ந்து விளங்கினுள். குளிர் மிகுந்த அந் நாட்டில் அவள் தினந்தோறும் அதிகாலையில் படுக்கையை விட்டெழுந்து கடவுளை நோக்கித் துதித்து வீடு வாசல்களையும் சமைக்கும் பாத்திரங் களையும் சுத்தி செய்துவிட்டுச் சமையல் அறையில் தன் தாயாருக்கு அருகில் உட்காந்து குற்றேவல் புரிந்துகொண்டு இருப்பாள்.

*　　　*　　　*

ஸைபீரியாவில் அக்காலத்தில் கம்பு என் னும் சிறு தானியம் விசேஷமாகப் பயிரிடப் பெற்று வந்தது. கம்பு அறுவடையாகும் சமயங் களில் பிராஸ்கோவியா கழனிகளுக்குச் சென்று கூலி வேலை செய்வாள். தினந்தோறும் கிடைக் கும் கூலியைக் கொண்டுவந்து தன் தாயாரிடம் கொடுப்பாள். அவர் சிற்சில சமயங்களில் கூலிக் குப் பதிலாகத் தானியமும் பெறுவதுண்டு. பதி னைந்து பிராயம் பூர்த்தியாகும் வரையில் அவள் யாதொருகவலையும் இல்லாமல் வளர்ந்து வந்தாள்.

ஒருநாள் இரவு போஜனம் அருந்திய பிறகு தளகர்த்தனும் அவன் மனைவியும் பிராஸ் கோவி யாவும் தாங்கள் குடியிருந்த குடிசைக்கு எதிரி லுள்ள வெளியிடத்தில் நாற்காலிகளில் உட்காந்து தங்களுடைய பழைய பதவியை நினைத்து வருத் தப்பட்டுக்கொண்டு இருந்தார்கள்.

லோ பவுலாப்:—நான் குற்றம் அற்றவன். குண்டுணிகளின் பொய் வார்த்தையை நம்பி, "ஸார்" எனக்கு இக்கொடிய தண்டனை விதித்தது அநியாயம். இவ்விடத்தில் நாம் நமது ஜீவ காலத்தை எவ்வாறு கழிப்பது? மேல் அதிகாரிகளுக்கும் 'ஸாரு'க்கும் நான் எழுதிய மனுக்கள் விழலுக்கு இரைத்த நீராயின. இனி நாம் என்ன செய்வது. நமது அருமருந்தன்ன புதல்வி பிராஸ் கோவியா அடிமைச் சிறுமியைப் போல் பிறருக்குத் தொண்டு செய்வதிலேயே தன் இளம் பருவத்தைப் பாழாக்குவதையும் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொள்ளாமல் நிரக்ஷர குக்ஷியாய் வளர்வதையும் காணக் காண என் மனம் வருந்துகின்றது.

மனைவி:—அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன! நம்மால் ஆவது ஒன்றும் இல்லை. கடவுள் கிருபை எப்படி யிருக்கிறதோ பார்ப்போம்.

இவ்விதம் கணவனும் மனைவியும் மனவருத்தத்துடன் பேசுவதைக் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்த பிராஸ் கோவியா மறுநாள் தன் தாயாரைப் பார்த்து, "அம்மா! என் தந்தையார் என் மனம் நொந்து துக்கப்படுகிறார்? இது நாம் பிறந்து வளர்ந்த ஊர் அல்லவோ? மேல் அதிகாரிகளுக்கும் 'ஸாரு'க்கும் அவர் மனு வெழுத வேண்டிய காரணம் என்ன?" என்று வினவினள்.

அவ் வார்த்தைகளைக்கேட்ட அவள் தாயார் தளகர்த்தனின் பூர்வ வரலாற்றை ஆதியோடந்த மாய்க் கூறி முடித்தாள்.

* * *

அன்று முதல் பிராஸ் கோவியா எவ்விதத்தி லாகிலும் தன் தாய் தந்தையரின் மனக் கவலையை நீக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண் டாள். அவர்கள் மறுபடியும் நல்ல பதவி யடைய தினந்தோறும் அவள் கடவுளை நோக்கிப் பிரார்த் தித்தாள்.

ஒருநாள் அவள் தனியே ஒரு மரத்தடியில் உட்கார்ந்து யாதோ யோசித்துக்கொண்டு இருக் கையில், "என் தந்தையாரைக் குறித்து நான் ஏன் "ஸாரி"டம் பேசக் கூடாது." என்னும் எண் ணம் அவள் மனத்தில் உதித்தது. 'மனம் உண்டானால் மார்க்கம் உண்டு.' கடவுள் அருளும் சுய முயற்சியும் ஒன்று சேர்ந்தால் இவ்வுலகில் முடியாத காரியமும் உண்டோ. ஆதலால், நான் ருஷிய மன்னனை நேரில் கண்டு பேச வழிதேட வேண்டும். என்னால் என்னுடைய தாய் தந்தை யர் முன்னிருந்த பதவியை அடைந்தால் என் ஜன்மம் சாபல்யம் அடையுமன்றோ!" என்று தனக்குள் தானே பேசிக் கொண்டாள். இவ்விஷ யத்தைத் தன் தாய் தந்தையருக்குத் தெரிவித்தால் அவர்கள் தன்னைக் கடிந்து பேசுவார்கள் என்று

உணர்ந்து கொண்ட அச் சிறுமி தன்னுடைய மனத்தில் உதித்த எண்ணத்தை எவருக்கும் வெளிப்படுத்தவே யில்லை.

ஆனால், அப் பெண்மணி நாள் தவறாமல் படுக்கை விட்டெழும் பொழுதும் படுக்கைக்குச் செல்லும் பொழுதும் இடை நடுவில் ஒழிந்த வேளைகளிலும் கடவுளை நோக்கி, "எங்கும் நிறைந்த இறைவனே! யாவும் உணர்ந்த பெரியோனே!! எளியவர்க்கு இரங்கும் எம்பெருமானே!!!.........இவ்விடத்தினின்றும் புறப்பட்டுப்போய் "லாரை"க் காண்பதற்கும், கண்டு பேசுவதற்கும், என்னருமைத் தாய் தந்தையரை விடுதலை செய்விப்பதற்கும் அற்பச் சிறுமியாகிய எனக்கு மனோதிடமும், தேக பலமும் புத்தி சாதுர்யமும் வாக்கு வன்மையும் காரிய சித்தியும் உண்டாக அருள் செய்வாயாக!", என்று பிரார்த்தித்தவண்ணம் இருந்தாள்.

* * *

பல மாதங்கள் சென்றன. இவ்விஷயத்தைக் குறித்து அவள் தன் தாய் தந்தையரிடம் பேசத் துணியவேயில்லை. அவர்களுக்கு ஒன்றும் தெரிவிக்காமலும் அவர்களுடைய உத்தரவு பெறாமலும் ஸைபீரியாவினின்றும் புறப்படுவது யுக்தமென்று அவள் நினைத்திலள். தாய் தந்தையருக்குக் கீழ்ப்படியாதிருத்தல் பெரும் பாதகம்

என்றும், அவ்வாறு கீழ்ப்படியாதிருக்கும் சிறுவர் சிறுமியர் கடவுளுடைய கோபத்துக்கு இலக்காகி அழிவர் என்றும் அவள் நன்ருய் உணர்ந்திருந் தாள்.

ஒருநாள் மாலை லோ பவுலாப் தனியே தன் அறையில் உட்கார்ந்து யாதோ ஆலோசித்துக் கொண்டிருந்தான். அது சமயம் பிராஸ்கோவியா அவனிடம் சென்று, "அப்பா! நீர் ஏன் எப் போது பார்த்தாலும் துக்கமுகத்துடன் இருக் கிறீர். நான் உயிருடன் இருக்கும் வரையில் உங் களுக்கு யாதொரு கவலையும் வேண்டா. கடவுளும் நமக்கு அருள் புரிவார்" என்று அவனுக்குத் தேறுதல் கூறினுள்.

தளகர்த்தன் தன் புதல்வியின் குளிர்ந்த மொழிகளைக்கேட்டு ஆனந்தங் கொண்டான். "நமக்குக் கடவுள் எப்போது அருள்புரிவாரோ தெரியவில்லையே." என்று சொல்லி நெடு மூச் செறிந்தான்.

இதுகாறும் தன் மனத்துள்ளே அடக்கி வைத்திருந்த எண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு அதுதான் தகுந்த தருணம் என்று அவளுக்குத் தோன்றிற்று. அப்போதே அவள் அவர்கள் விஷயமாக ஸாரைக் கண்டு பேசத் தீர்மானித் திருப்பதையும் அத் தீர்மானத்தை யாதொரு விக் கினமும் இல்லாமல் நிறைவேற்ற அவனுடைய

அநுமதி அவசியம் என்பதையும் அவனுக்கு வெகு மரியாதையுடன் எடுத்துக் கூறினாள்.

அவள் சொன்ன மொழிகளைக் கேட்டலோ பவுலாப் புன்னகை புரிந்து, "என்னருமைக் குழந்தாய்! அது உன்னால் முடியாத காரியம். இக் கிராமத்தில் இருந்து ஏறக்குறைய இரண்டாயிரம் கல் தூரத்திலுள்ள பீட்டர்ஸ் பரோ (Petersburgh) நகரில் வசித்து வரும் நமது "ஸாரை" நீ எவ்விதம் காண்பாய்?" என்றான். அத்தருணம் அவனுடைய மனைவி சமையல்வேலையை முடித்து விட்டு அந்த அறைக்குள் நுழைந்தாள். அவன் அவளைக் கண்டதும், "பெண்ணே! நமது புத்திரி பிராஸ்கோவியா ஸாரை நேரில் கண்டு பேசி நம்மை விடுதலை செய்விக்கப் போகிறாள். இனி நமக்குக் குறையொன்றும் இல்லை" என்று நகையாடியவண்ணம் தன் மகளைக் கேலி செய்தான்.

மனைவி:—நாதா! அவளால் முடியாத காரியமும் உண்டோ. அவள் வானத்தை வில்லாக வளைப்பாள்; மணலைக் கயிறாகத் திரிப்பாள்.

அப் பரிகாச மொழிகளைக் கேட்டதும் பிராஸ்கோவியா அங்கு ஒரு மூலையில் உட்கார்ந்து அழத் தொடங்கினாள். அவளுடைய தாயார் அது கண்டு தன் கையிலிருந்த ஒரு துணியை அவளிடம் கொடுத்து, "என் கண்மணி! நீ அழவேண்டா. நாம் போஜனம் அருந்தும் வேளை நெருங்கிற்று.

இத்துணியைக் கொண்டு போஜன மேஜையை நன்ருகத் துடைத்துவிடு. பிறகு உன் இஷ்டப் படி நீ பீட்டர்ஸ்பரோவுக்குச் சென்று ஸாரைக் காணலாம்.'' என்ருன்.

* * *

அது முதற்கொண்டு பிராஸ்கோவியா சமயம் நேர்ந்தபோதெல்லாம் தன் தாயையும் தந்தையை யும் மாறிமாறி அநுமதி கேட்ட வண்ணம் இருந் தாள். அவளுடைய தகப்பஞகிய தளகர்த்தன் ஒரு நாள் அவள்மீது கோபங்கொண்டு, "நீ புத்தியற்ற வள்; கொம்புத் தேனுக்கு ஆசைப்படும் முட வனை யொத்தவள். இனி நீ இவ்விஷயத்தைப் பற்றி உன் தாயாரிடமாவது என்னிடமாவது பேச லாகாது. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன்?'' என்று கடிந்து உரைத்தான்.

பிராஸ்கோவியா என்ன செய்வாள் பாவம்! அவளுக்கு ஒன்றும் செய்யத் தோன்றவில்லை. அவள் ஸாரைக் கண்டு பேச அநுமதி கொடுக்க வேண்டும் என்று தன் பெற்ருேரைக் கேட்பதைத் தவிர்த்தாள். ஆயினும், அது விஷயமாகக் கட வுளை நோக்கிப் பிரார்த்திப்பதை அவள் மறக்கவே இல்லை. ஸைபீரியா அவளுக்கு மனிதரை உயிரு டன் புதைக்கும் இடுகாட்டை ஒத்து விளங்கிற்று.

அவளுடைய மன ஊக்கம் சிறிதும் குறைய வில்லை. அவள் நாளுக்கு நாள் தன் தாய் தந்தை

யருக்கு உரிய பணிவிடைகளைத் தவருமல் செய்து வருவதில் கவனத்தைச் செலுத்தி வந்தாள்.

*　　*　　*

அத்தியாயம் 6.

அநுமதிச் சீட்டு.

இவ்வாறு மூன்று வருஷங்கள் முடிவு எய்தின. அவள் ஸாரைக் காணத் தன் தாய் தந்தையரிடம் அனுமதி பெறவில்லை.

*　　*　　*

பிராஸ்கோவியாவின் தாயார் திடீரென்று பிணிவாய்ப்பட்டுப் பெரிதும் வருந்தினுள். அப்போது அப்பெண் இரவும் பகலும் நித்திரை இல்லாமல் அவளுக்குப் பட்டபாடு சொல்லத் தரமல்ல. பகலில் வீட்டு வேலைகளைச் செய்வதோடு தன் தாயார் அண்டையில் இருந்துகொண்டு அவளுக்கு வேண்டிய பனிவிடைகளை வேளைக்கு வேளை அவள் செய்துவந்தாள்; இராக் காலத்தில் அவள் பக்கலில் உட்காந்து கடவுளைப்பிராத்தித்த வண்ணம் இருந்தாள்.

வீட்டு விவகாரங்களிலும் தன் தாய் தந்தையரைப் பராமரிப்பதிலும் இணையற்று விளங்கிய பிராஸ்கோவியாவின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துவந்த அவள் தாய்தந்தையர் அவளைக்

குழந்தையாகப் பாவிப்பதை விட்டுத் தங்களை ஆதரிப்பதற்கு இவ் வுலகில் மானுடப்பிறவி எடுத்து வந்த குலத் தெய்வமென நினைக்கலாயினர்.

நாளடைவில், சாகக்கிடந்த அவள் தாயார் வியாதி நீங்கிச் சொஸ்தமடைந்தாள். லோ பவுலாப் மனமகிழ்ச்சி அடைந்தான். கடவுள் அருளாலும் பிராஸ்கோவியாவின் இடைவிடாத தேக உழைப்பாலும் தன் மனைவி பிழைத்ததாக அவன் எண்ணினான்.

ஸாரைக் காணவேண்டும் என்னும் விஷயத்தைப்பற்றி மூன்று வருஷகாலம் வாய்வாளாமை மேற்கொண்டிருந்த பிராஸ்கோவியா மறுபடியும் தன் தாய்தந்தையரை நோக்கி, “இப்போதாகிலும் பீட்டர்ஸ் பரோவுக்குச் செல்ல நீங்கள் எனக்கு விடையளிப்பது அவசியம் என்று நான் நினைக்கிறேன். நான் அவ்விடத்திற்குச் சென்று ஸாரைக் கண்டு பேசினால் நீங்கள் விடுதலை அடைவது நிச்சயம். நாம் நமது ஜீவகாலத்தை யாதொரு பயனும் இல்லாமல் இங்குக் கழித்து விடுவது கடவுளுக்கும் சம்மதி யிராது. உங்களுக்குப் பிறகு நான் இவ்விடத்தில் எவ்வாறு ஜீவிப்பேன்.” என்றாள். அவள் கண்களில் நீர் கலங்கிற்று.

லோபவுலாப் தன் புதல்வி கூறிய மொழிகளைக் கேட்டதும் மனம் உளைந்தான். “அம்மா,

பிராஸ்கோவியா! பீட்டர்ஸ்பரோ நகரம் இவ்விடத்திலிருந்து ஏறக்குறைய இரண்டாயிரம் கல் தூரத்திலிருக்கிறது. நீ கால் நடையாக யாதொரு வழித்துணையும் செலவிற்குப் போதுமான பணமும் இல்லாமல் எவ்வாறு அந் நகரத்திற்குச் செல்லக்கூடும். ஸாரைக் காண்பதற்கு உனக்கு நல்ல உடைகள் தேவையா யிருக்குமே. இக்காலத்தில் ஆள் பாதி ஆடை பாதி என்பதை நீ அறியாமற் போனதென்ன? மேலும், உன்னை விட்டு நாங்கள் இருவரும் தனியே இவ்விடத்தில் எவ்வாறு வசிப்போம். இதுவும் அல்லாமல் நீ இக் கிராமத்தை விட்டுப் புறப்பட வேண்டியதானுல் அதிகாரிகளின் அநுமதிச் சீட்டு (Pass-port) பெற வேண்டும். அவ்வநுமதிச் சீட்டு பெறுவது சுலபமான காரியம் அல்லவே. நீ குழந்தை அல்லள். உனக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. இவ் விஷயத்தைப்பற்றி நீ தீர யோசித்துப் பார்.'' என்றான்.

பிராஸ் கோவியா :—அப்பா! 'முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்.' நாம் ஒரு காரியத்தில் சித்தி பெற வேண்டியதாய் இருந்தால் பல கஷ்டங்களையும் அநுபவித்தே தீரவேண்டும். கஷ்டங்களுக்குப் பயந்து நாம் எடுத்துக்கொண்ட காரியத்தைக் கை நழுவ விடலாமா.

"மெய்வருத்தம் பாரார் ; பசிநோக்கார் ; கண்துஞ்சார்;
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்;—செவ்வி
அருமையும் பாரார் ; அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண் ஆயினர்."

என்னும் ஆன்றோர் வாக்கை மறுக்க வல்லார் யார் !

லோ பவுலாப் தன் மகளுடைய மன உறுதியை மாற்றச் சக்தி அற்றவனுய் இருந்தான்.

அன்றைத் தினமே அப்பெண் தான் பீட்டர்ஸ்பரோ நகரத்துக்குப்போக உத்தேசித்து இருப்பதையும் தனக்கு அது விஷயமாக அநுமதிச் சீட்டு தேவை என்பதையும் குறித்து வெகு விநயத்துடன் மநு ஒன்று எழுதுவித்து அதை ஸைபீரிய நாட்டுத் தலைநகரமாகிய "டொபால்ஸ்க்" (Tobolsk)கில் இருந்த ருஷிய உத்தியோகஸ்தருக்கு அனுப்பினுள்.

அவள் எதிர்பார்த்தபடி அதற்கு உடனே பதில் ஒன்றும் வரவில்லை. அநுமதிச் சீட்டு இல்லாமல் அவள் இஷிம் கிராமத்தை விட்டுப் புறப்படுவதும் கூடாத காரியம். அதற்காக அவள் மனம் வருந்தினுள். கடவுளை நோக்கிப் பிரார்த்தித்தாள்.

"அதிகாரிகள் அநுமதிச் சீட்டு அனுப்ப மாட்டார்கள். அவர்கள் அதை அனுப்பாதிருப்பதே நலம். பிராஸ்கோவியா எங்களை விட்டுப்

பிரியவே மாட்டாள்" என்று லோ பவுலாப் ஒரு வாறு தேறுதல் அடைந்திருந்தான்.

*　　*　　*

ஆறு மாதங்களுக்குப் பிறகு அநுமதிச் சீட்டு வந்தது. அச்சீட்டுடன் ருஷிய அதிகாரிகள் கையெழுத்திட்ட கடிதமும் ஒன்று இருந்தது. அதில், "பிராஸ்கோவியா குற்றவாளி அல்லள். அவள் தன் இஷ்டப்படி எங்கெங்கும் போகலாம். ஆதலால், அவள் எப்போதாயினும் ஸைபீரியை விட்டு வெளிக்கிளம்பலாம்." என்று எழுதப் பெற்றிருந்தது.

அக்கடிதமும் அநுமதிச் சீட்டும் வந்தபோது பிராஸ்கோவியா வீட்டில் இல்லை. யாதோ அலுவலாய் வெளியே போய் இருந்தாள். அதனால், அவள்மீது அளவற்ற அன்பு பூண்டிருந்த அவள் தகப்பன் அவற்றை அவள் அறியாத வண்ணம் ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டினான். "அநுமதிச் சீட்டை அதிகாரிகள் அனுப்ப மாட்டார்கள் என்று அநுமானித்தே மனு வொன்றை அனுப்ப நான் அவளுக்கு உத்தரவு கொடுத்தேன்...பிராஸ்கோவியாவோ பதினெண்பிராயம் உடையவள். அவளைத் தனியே பீட்டர்ஸ்பரோவுக்குப் போக விடுவது மூடத்தனமாகும். எக்காரணம் பற்றியும் அவள் எங்களை விட்டுப் பிரியவே கூடாது." என்று தனக்குள் தானே நிர்ணயித்துக் கொண்டான்.

ஆனால், பிராஸ்கோவியா தனக்கு அநுமதிச் சீட்டு வந்த விஷயத்தை எவ்விதமாகவோ அறிந்து கொண்டாள். அப்போதே அவள் தன் அன்னையை அணுகி "அம்மா! அநுமதிச் சீட்டு வந்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். அதை அப்பா எங்கே வைத்திருக்கிறார். அந்த அநுமதிச் சீட்டைப்பெற நான்கடவுளை நோக்கிப் பிரார்த்தித்தது சொல்லத் தரமல்ல. இனி நான் ஒரு க்ஷணமும் தாமதிக்கக் கூடாது. பீட்டர்ஸ்பரோவுக்குப் புறப்படவேண்டும். நீங்கள் படும் துன்பத்தைக் காண என் மனம் சகிக்கவில்லை. உங்களுக்கு இக்காலத்தில் உதவிசெய்யாவிடில் நான் பெண்ணாய்ப் பிறந்தென்ன பலன்?" என்றாள்.

தாயார் :—"கண்மணி பிராஸ்கோவியா! நீ புறப்பட்டுப் போவதற்கு எனக்கு யாதொரு ஆக்ஷேபமும் இல்லை. நீ உண்டு உன் தகப்பனார் உண்டு." என்றாள்.

பிராஸ்கோவியா :— அம்மா! நீங்கள் இவ்விதம் சொல்வது கூடாது. எப்படியாகிலும் தகப்பனாரிடம் எனக்காக மன்றாடி அந்த அநுமதிச் சீட்டை அவரிடம் இருந்து வாங்கிக் கொடுத்து என்னைப் பயணப்படுத்துவீராக!

தாயார் :—"சரி தான்" என்றாள்.

* * *

வெளியிற் சென்றிருந்த லோ பவுலாப் வீட்டுக்கு வந்ததும் அவன் மனைவி பிராஸ்கோவியா

பீட்டர்ஸ் பரோவுக்குப் போவதைப்பற்றி அவனிடம் நெடுநேரம் உரையாடிக் கொண்டிருந்தாள்.

லோ பவுலாப்:—"பெண்ணே! பிராஸ்கோவியா பெரும் பிடிவாதக்காரியாய் இருக்கிருள். அவளைப் போகாமற் தடுப்பது நம்மால் முடியாத காரியம். இவ் வெண்ணம் அவளுக்கு எவ்வாறு உதித்தது." என்று சொல்லிக் கொண்டிருக்கையில், "யாவும் கடவுள் செயல்" என்று கூறிய வண்ணம் பிராஸ் கோவியா உள் நுழைந்தாள்.

அப்போது லோ பவுலாப் தன் பேச்சை நிறுத்தி அவளைப் பார்த்து, "அம்மா! சிறு பெண்ணுகிய நீ பெருங்காரியத்தில் தலையிடலாமா? இரண்டாயிரம் கல் தூரத்தில் உள்ள பீட்டர்ஸ் பரோ நகரத்துக்கு நீ போவது எவ்விதம். நீ அப் பட்டணத்தை அடைந்தாலும் நீ "ஸாரு"டன் எவ்வாறு பேசப்போகிருய். நீ இங்கு என்னுடன் பேசுவதேபோல் ருஷிய மன்னனிடம் சுலபமாய்ப் பேசலாம் என்று நினைத்துவிட்டாயோ. அந்த அரசன் வசிக்கும் அரண்மனையைச் சுற்றிலும் ஈட்டி ஏந்திய கையினராய் வாயிற் காப்பாளர் பலர் காவல் காத்தவண்ணம் இருப்பார்கள். அவர்கள் உன்னை அரண்மனை உள்ளே நுழைய விடுவார்களோ. உலக விவகாரம் உனக்கு ஒன்றும் தெரியவில்லையே. இஃதென்ன சிறு பிள்ளைத் தனமாய் இருக்கிறது!—உடுக்க நல்ல உடையும் உன்னை

அரசனுக்கு அறிமுகமாக்க வல்லவர் ஒருவர் சிநேகமும் இல்லாமல் நீ அரண்மனையுள் நுழைய முடியுமோ. பிச்சைக்காரியைப்போல் தோன்றும் உன்னை அரசனிடம் அழைத்துக்கொண்டு போக முன் வருபவர் எவர்? இவற்றை யெல்லாம் நீ தீர யோசிக்கவேண்டும்.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு"

என்பது பெரியோர் வாக்கன்றே!

தகப்பன் கூறிய இம் மொழிகளை வெகு பொறுமையுடன் கேட்டுக் கொண்டு இருந்த பிராஸ் கோவியா, "அப்பா! நான் உலக விவகாரங்களை அறியவேண்டிய அவசியமே இல்லை. அநுமதிச் சீட்டை அதிகாரிகளைக் கொண்டு எனக்கு அனுப்பத் தூண்டிய அருட்பெருங் கடவுள் என் கஷ்டங்களை நிவர்த்திப்பார் என்னும் நம்பிக்கை எனக்குப் பூரணமாக இருக்கிறது. மேலும், 'முயற்சி திருவினை ஆக்கும்' என்பதை நான் நன்றாய் அறிவேன்......அநுமதிச் சீட்டு இல்லாமலே பீட்டர்ஸ்பரோவுக்கு புறப்பட்டுப் போக எனக்குத் தைரியம் உண்டு. ஆனால், உம்மிருவருடைய வார்த்தைகளை மீறி எவ்விஷயத்திலும் தலையிடலாகாது என்று நான் விரதம் பூண்டிருக்கிறேன்......இஃதொன்றே என்னை இதுகாறும் ஸைபீரியாவை விட்டுப்போகாமல் தடுத்து

வந்தது. 'தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை' 'தாய்சொல் துறந்தால் வாசகம் இல்லை' என்னும் பழமொழிகள் என் இருதயத்தில் நன்ருகப் பதிந்து இருக்கின்றன." என்று கூறி முடித்தாள்.

தாய் தந்தையர் இருவரும் பிராஸ் கோவியா ஸைபீரியாவை விட்டுப் புறப்பட்டுப் பீட்டர்ஸ் பரோவுக்குப் போகச் சம்மதித்தனர்.

அத்தியாயம் 7.

பிராஸ் கோவியாவின் பிரயாணம்.

கிறிஸ்தாப்தம் 1805-ஆம் வருஷம் செப்டெம்பர் மாதம் 8 - ஆம் தேதி விடியற் காலையில் பிராஸ் கோவியா நல்லுடை தரித்துக்கொண்டு பீட்டர்ஸ்பரோ நகரத்துக்குப் புறப்படத் தயாராய் இருந்தாள். சிறு பை ஒன்று அவள் தோளில் தொங்கிற்று.

லோ பவுலாப் அப்போது தன்னிடத்திலிருந்த ஒரு வெள்ளி ருஷிய நாணயத்தை எடுத்து அவளிடங் கொடுத்து, " அம்மா, உன் வழிச் செலவிற்கு இதை வைத்துக்கொள்" என்ருன்.

பிராஸ் கோவியா:—இந்த நாணயம் இருந்தால் உங்களுக்கு உபயோகமாகும். ஆதலால், இதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்.

லோ பவுலாப் :—பிராஸ் கோவியா ! நீ என் வார்த்தையை மீறக் கூடாது. இந்த நாணயத்தை நீ உன்னுடன் கொண்டு போகத்தான் வேண்டும்.

பிராஸ் கோவியா, "சரி" என்று கூறி அதை வெகு அன்புடன் வாங்கிக் கொண்டாள்.

தாய் தந்தையர் இருவரும் பிராஸ் கோவியாவும் சிறிது நேரம் கடவுளை நோக்கித் துதித்தனர். அப்பெண்ணின் பிரயாணம் யாதொரு குறைவுமின்றி முடியவேண்டும் என்பது அவர்கள் கோரிக்கை. லோ பவுலாப்பைப்போல் குற்றம் சாட்டப் பெற்று ஸைபீரியாவுக்கு வந்திருந்த இரண்டு ஏழை மனிதர் பிராஸ் கோவியாவிடம் வந்து, "அம்மா ! நீ ஸாரைக் கண்டு பேசுகையில் எங்களையும் மறந்துவிட வேண்டா." என்று சொல்லித் தங்களிடம் இருந்த தொகையை அவளுக்குக் கொடுக்க யத்தனித்தார்கள்.

பிராஸ் கோவியா அத்தொகையை வாங்கிக் கொள்ளாமல், "ஐயன்மீர் ! என்னால் கூடியவரையில் உங்களையும் மீட்பிக்க முயற்சி செய்கிறேன்" என்றாள்.

பிராஸ் கோவியாவை அவளுடைய தாய் தந்தையர் இருவரும் கட்டித் தழுவி முத்தம் இட்டனர்; அவளை ஆசீர்வதித்தனர்.

*　　　*　　　*

பதினெண் பிராயத்துப் பெண் பிள்ளையாகிய பிராஸ்கோவியா தன் தாய் தந்தையரின் துன்பத்தை நீக்கும் பொருட்டு, ஒரு வெள்ளி ருஷிய நாணயத்தை வழிச் செலவுக்கு வைத்துக்கொண்டு, தன்னுடைய தேக சுகத்தையும் கருதாமல் இரண்டாயிரம் கல் தூரத்தில் பீட்டர்ஸ்பரோ நகரத்தில் வசித்து வந்த முதலாம் பவுல் என்னும் ருஷிய ஸாரைக் கண்டு பேச நிர்ணயங்கொண்டு, ஸைபீரியாவினின்றும் புறப்பட்டது மிக்க ஆச்சரியமான விஷயமாகும்.

பிராஸ்கோவியா தன் தாய் தந்தையரையும் தான் அவர்களுடன் வசித்து வந்த வீட்டையும் விட்டுப் புறப்பட்டாள். மேலே கூறிய இரண்டு குற்றவாளிகளும் அப்பெண்ணைப் பின்தொடர்ந்து சென்று நெடுந்தூரம் வழிவிட்டுத் திரும்பினர்.

அன்றைத் தினம் இரவு அவள் அடுத்த கிராமத்தில் தங்கினாள். அங்கு அவளுக்கு அறிமுகமானவர்கள் அநேகர் இருந்தனர். அவர்கள் அவளை வெகு அன்புடன் உபசரித்து அவளுக்கு உண்ண உணவும் தங்க விடுதியும் கொடுத்தார்கள்.

மறுநாள் காலை அவள் நித்திரை நீங்கி எழுந்தாள். அவளுடைய அயர்வு தீர்ந்த பாடில்லை. அவள் தனியே பிரயாணம் செய்ய அஞ்சினாள். அப்போது அவள் கடவுளை நினைக்கவே அவளுக்கு இருந்த அச்சம் பறந்தோடியது.

சூரியன் உதித்தான். அவள் உள்ளத்தில் கிளர்ச்சி உண்டாயிற்று. அவள் அக்கிராமத்தை விட்டுப் பயணப்பட்டாள். அவளுக்கு வழி தெரிய வில்லை. மறுபடியும் அவள் தங்கி யிருந்த கிராமத்தை அடைந்தாள். அநேக முறை அவள் முன்னேக்கிச் செல்வதை அறியாது திகைத்தாள். அவ்வழியே போகிறவர்களைப் பார்த்து, "பீட்டர்ஸ்பரோ நகரத்துக்குப் போகும் மார்க்கம் யாது?" என விசாரித்தாள்.

அவர்கள் அவளுக்கு மறுமொழி பகராமல் நகையாடிய வண்ணம் சென்றார்கள். அவளுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்று நினைத்து விட்டார்கள். ஏனெனில், அப்பெண் புத்தி சுவாதீனம் உடையவளாய் இருப்பின் யாதொரு முஸ்தீப்பும் இல்லாமல் இரண்டாயிரம் கல் தூரத்தில் இருக்கும் பீட்டர்ஸ்பரோ நகரத்துக்குப் பிரயாணம் செய்ய முயற்சி செய்வாளா என்று அவர்கள் யோசித்தார்கள்.

அவர்கள் அவ்விதம் ஆலோசித்தது ஆச்சரியப்படத்தக்க விஷயம் அன்று. தாய் தந்தையர் மீதுள்ள அளவு கடந்த அன்பினால் உந்தப் பெற்று எவரும் கலைக்க இயலாத மனவன்மையும், தளராத ஊக்கமும் பொருந்தி விளங்கிய பிராஸ்கோவியாவை யன்றி அவளையொத்த நிலையில் இருந்த இதர பெண்கள் அத்தகைய ஆபத்

துக்கிடமான பிரயாணத்தில் சித்தி பெறுவது கூடாத காரியம் என்பது யாவரும் எளிதில் உணரத்தக்கதே.

பிராஸ்கோவியாவுக்கு ருஷிய நாட்டுத் தலை நகராகிய பீட்டர்ஸ்பரோ நகரத்தின் பெயர் அல்லாமல், சமீபத்தில் உள்ள பட்டணங்களின் பெயராவது கிராமங்களின் பெயராவதுதெரியாது.

உலக விஷயமே இன்னதென்று உணராத அவ்வுத்தம இளம்பெண் இவ்வாறு கால்நடையாக வெகு சிரமத்துடன் அநேக கிராமங்களைக் கடந்து சென்றாள்.

அவள் ஒருநாள் மூன்று ரஸ்தாக்கள் சந்திக்கும் ஓர் இடத்தை அடைந்தாள். அவற்றுள் எந்த ரஸ்தாவைப்பற்றிச் சென்றால் பீட்டர்ஸ்பரோ நகரத்தை அடையலாம் என்று அங்கு நெடு நேரம் நின்றவண்ணம் யோசித்தாள். அது சமயம், அவ்வழியே வண்டி யொன்று சென்றது. அவள் அதில் உட்கார்ந்திருந்தவர்களை நோக்கி, "ஐயன்மீர்! இந்த மூன்று ரஸ்தாக்களுள் எது பீட்டர்ஸ்பரோ நகரத்துக்குச் செல்கிறது?" என்று வினவினள்.

"இம்மூன்று சாலைகளும் பீட்டர்ஸ்பரோ நகரத்திற்குப் போகின்றன" என்று அவர்கள் பொய்யுரை கூறி அவளை ஏளனம் செய்தார்கள். அதை அறிந்த அம்மாது மனம் நொந்தாள்.

"கடவுளைத் தவிர வேறு எவரும் எனக்குத் துணை செய்யமாட்டார்" என்று அவம் தனக்குள் தானே நினைத்துக்கொண்டு யாவும் உணரவல்ல ஈசன்மீது பாரத்தைப் போட்டு 'தருமமே ஜயம்' என அச்சாலைகளுள் நடுச்சாலை மார்க்கமாய் நடக்கலாயினள். அப்பெரிய சாலை பீட்டர்ஸ் பரோ நகரத்துக்குச் செல்லும் மார்க்கமென்பதை அவள் பின்பு தெரிந்து கொண்டு கடவுளை மனமார வாழ்த்தினள்.

* * *

அவள் சென்ற இடங்களில் குடிசைகளில் வசித்து வந்த ஏழைக் குடியானவர் அனைவரும் அவளுடைய வரலாற்றைக்கேட்டு அவள் மீது பரிதாபங் கொண்டு அவளுக்குத் தங்களால் இயன்ற வரையில் உண்ண உணவும் படுத்து நித்திரை செய்ய இடமும் கொடுத்து உதவினர். ஆனால், மாளிகையில் வெகுஆடம்பரமாக வசித்து வரும் பணக்காரர் அவளைப் பிச்சைக்காரி என்றும், திருடி என்றும் அவமதித்துப் பேசி அடித்துத் துரத்தினர்.

உதாரணமாக, அவள் ஒருநாள் "கழுவிசெப்" என்னும் இடத்திற்குச் சிறிது தூரத்தில் இருந்த கானக மார்க்கமாய்ப் போகும்போது காற்றும் மழையும் கலந்து அடித்தன. அவளுடைய தேக முழுவதும் மழை நீரால் நனைந்தது. அவ

ளுக்குக் குளிர் அதிகம் எடுத்தது. ஆதலால், அவள் வெகு விரைவாக நடந்தாள். அவள் அவ்விதம் போகையில் அவளுக்கெதிரில் ஒரு பெரிய மரம் வேரோடு சாய்ந்தது. அவள் திகில் கொண்டு இனி முன்னோக்கிச் சென்றால் தன் உயிருக்கே ஆபத்து வரும் என்று அங்கிருந்த புதர்களுக்குள்ளே நுழைந்து சிறிது நேரம் தங்கினாள். அவள் உடல் குளிரால் விறைத்துக் கொண்டது. ஆகாய முழுவதும் இருள் கவிந்து கொண்டிருந்தது.

அவ்வழியே ஒரு வண்டியில் போக நேர்ந்த குடியானவன் ஒருவன் அப் பெண்ணைக் கண்டு, அவள் மீது மிக்க பரிதாபம் அடைந்து, அவளைத் தூக்கி வண்டியில் போட்டுக்கொண்டு போனான். மறுநாள் பொழுது விடிந்ததும் அந்த வண்டி கழுவிசேப் கிராமத்தை அடைந்தது. அதுகாறும் மூச்சுப் பேச்சின்றி இருந்த பிராஸ்கோவியா தன்னைத் தானே சுதாரித்துக்கொண்டு அந்த வண்டியில் இருந்தபடியே எழுந்து உட்கார்ந்தாள்.

அவள் மூர்ச்சை தெளிந்து உட்கார்ந்ததைக் கண்ட அந்த வண்டிக்காரன் அவளை அக்கிராமத்தில் இறக்கி விட்டுத் தன் வழியே வண்டியை ஓட்டிக்கொண்டு போனான்.

அவளுக்குப் பசியால் காது அடைத்தது; கண் இருண்டது. அவள் நிற்க முடியாமல் கீழே 'தொப்'பென்று வீழ்ந்தாள். அவள் தேக முழுவதும்சேற்றால் மூடுண்டது. ஒரு கிழவியேபோல் அவள் தள்ளாடித் தள்ளாடி நடந்த வண்ணம் அருகில் இருந்த ஒரு வீட்டை அடைந்தாள்; அவ் வீட்டுக்குச் சொந்தக்காரியைப் பார்த்து, "அம்மா, நான் மழையில் நனைந்து குளிரால் வருந்துகிறேன். இன்றைத் தினம் மாத்திரம் இங்குத் தங்கி இருக்க எனக்கு அநுமதி தருவீராக!" என்று வேண்டிக் கொண்டாள்.

வீட்டுக்காரி, "உனக்கு இங்கு இடம் எது? இவ்விடத்தில் நில்லாதே. போ, போ!" என்று அவளைப் பரிதாபம் இன்றித் துரத்திவிட்டாள்.

இவ்வாறு அக்கிராமத்து வீட்டுக்காரர் பலர் கன்னெஞ்சம் உடையவராய் அவளைத் திருடி என்றும் சோம்பேறிப் பெண் என்றும் தூஷித்து அனுப்பினர். அவளை அடிக்காமல் விட்டதற்குக் கடவுள் அருளே காரணமாகும்.

ஆயினும், பிராஸ்கோவியா தைரியத்தைக் கைவிடவில்லை. அவள் "கடவுள் என்னை விட்டுப் பிரியாமல் என் அருகில் இருக்கிறார். அவர் எழுந்தருளி இருக்கும் கோயிலுக்குச் சென்றால் அவ்விடத்தினின்று என்னை எவரும் துரத்த மாட்டார்கள்." என்று நினைத்து அக்கிராமத்தில்

இருந்த கோயிலை நோக்கி நடந்தாள்; அங்குப் போய்ச் சேர்ந்ததும் அக்கோயில் பூட்டப் பெற்றிருந்ததைக் கண்டாள். கோயிலின் வெளிப்புறத்தில் இருந்த ஓர் ஒதுக்கிடத்தில் சிறிது நேரம் தங்கினாள்.

அக்கிராமத்தில் இருந்த குறும்புத் தனமுள்ள சிறுவர் பலர் ஒன்று கூடி, அவளுடைய பரிதாபகரமான நிலைமையையும் பொருட்படுத்தாமல் அவளைப் பலவாறு கேலி செய்யத் தலைப்பட்டனர். அப்பெண் ஒன்றும் பேசாமல், "கடவுளே, உன் திருக்கோயிலை அடைந்தும் எனக்கு இத்துன்பம் நேரவேண்டுமோ. உன்னைத் தவிர எனக்குத் துணைவர் வேறு இலர்" என்றாள். அவள் கண்களில் நீர் தாரை தாரையாய் வடிந்தது.

இரண்டு மணி நேரம் சென்றது. நடுத்தர வயதுள்ள ஒரு ஸ்திரீ அச்சிறுவரின் கூட்டத்தை விலக்கிக்கொண்டு பிராஸ்கோவியாவை அணுகி "குழந்தாய்! நீ யாவள்? இங்கு வர வேண்டிய காரணம் என்ன?" என்று கேட்டாள். இதுகாறும் அப் பெண்ணைப் பரிகாசம் செய்து கொண்டிருந்த சிறுவர் ஓட்டம் பிடித்தனர்.

பிராஸ்கோவியா அந்த ஸ்திரீயிடம் தன் வரலாற்றை ஆதியோடந்தமாய்க்கூறி முடித்தாள். அப்பெண்ணுடைய வாய்மொழியைக் கேட்ட ஸ்திரீ பெரிதும் வருந்தினாள். "என் கண்மணீ!

உன்னைப்போன்ற உத்தமப் பெண் துன்பப் படுவ தைப்பார்க்க என் மனம் சகியாது. உன் எண் ணம் ஈடேறக் கடவுள் அருள் புரிவாராக! இனி நீ இங்கிருப்பது கூடாது. என் பின்னே வா" என்று அவளை வருந்தி அழைத்தாள்.

அவள் பின்னே செல்ல விரும்பிய பிராஸ் கோவியா எழுந்திருக்க யத்தனித்தாள். அவளால் எழுந்திருக்க முடியவில்லை. அவளுடைய கை கால்கள் குளிரால் விறைத்துக் கொண்டிருந்தன. அவள் பாதரக்ஷைகளுள் ஒன்று காணமற் போய் விட்டது. அவளுடைய பாதங்கள் இரண்டும் வீங்கியிருந்தன.

உடனே அந்த ஸ்திரீ வண்டி யொன்று தரு வித்து அவளை அதில் ஏற்றித் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனாள்.

அத்தியாயம் 8.

பிராஸ்கோவியாவின் பிரயாணம்.

(தொடர்ச்சி.)

பிராஸ்கோவியா அத் தயாள குணமுள்ள ஸ்திரீயின் வீட்டில் பல நாட்களாகத் தங்கி இருந் தாள். அவள் தேகம் சொஸ்தம் அடைந்து கொண்டே வந்தது.

ஒரு நாள் அப்பெண் எதிர்பாராத விதமாய் யாவும் உணர்ந்த கடவுள் அருளால், தன்னைப் பாதுகாத்து வந்த உத்தம ஸ்திரீயை நோக்கி, "அம்மா! தாங்கள் இதுவரையில் எனக்குச் செய்த பேருதவியை நான் எக்காலத்தும் மறக்கவே மாட்டேன். தாங்கள் எனக்குப் போக உத்தரவு அளிக்க வேண்டும். இனி நான் இங்குத் தங்கினால் என் காரியம் கெட்டுப்போகும்" என்றாள்.

ஸ்திரீ :—குழந்தாய்! நீ வயதிற் சிறியவள். நீ எடுத்துக்கொண்ட காரியமோ மிகப் பெரிது. அக் காரியம் இனிது முடியுமாறு கடவுள் அருள் புரிவாராக! உன்னை இங்கேயே இருத்திக்கொள்ள எனக்குப் பிரியமாய் இருக்கிறது. ஆயினும், நீ தலையிட்டுக்கொண்ட விஷயம் என்னால் கெட்டுப் போய் விட்டது என்னும் அபவாதத்திற்கு நான் உட்படவே மாட்டேன். உன்னிஷ்டம்போல் நீ புறப்பட்டுப் போகலாம்.

மறுநாள் பிராஸ்கோவியா அக்கிராமத்தை விட்டுப் புறப்பட்டாள். அவளை உபசரித்து வந்த ஸ்திரீ அவளுக்கு வழிச் செலவிற்குக் கொஞ்சம் பணமும் பசியாற்றிக்கொள்ள பலகாரங்களும் கொடுத்தனுப்பினாள். அக்கிராமத்தாருள் ஒருவன் அவள் கால்களுக்குப் பாதரக்ஷை கொடுத்து உதவினான்.

*　　*　　*

அவள் தன் தேக செளக்கியத்தையும் அவ் வவ்விடங்களில் சீதோஷ்ண ஸ்திதியையும் ஜனங் களின் தன்மையையும் அநுசரித்து ஒவ்வோர் இடத்தில் தங்கியும் சில இடங்களில் தங்காமலும் வழி நடந்த வண்ணம் இருந்தாள். அவள் தங்கும் இடத்தில் அவளுக்கு நடக்கும் உபசரணை களுக்குப் பதிலாகத் தன்னால் ஆனமட்டும் குற்றே வல் செய்து வந்தாள்.

ஒரு நாள் மாலை அவள் ஒரு கிராமத்தை அடைந்தாள். அக்கிராமத்தில் ஒரு வீதியிலிருந்த வீட்டார் அனைவரும் அவளுக்குத் தங்க இடங் கொடுக்காமல் அவளைத் துரத்தினார்கள். அப் போது கிழவன் ஒருவன் அவளைத் தன் வீட்டுக்கு அழைத்தான். அவன் குள்ளன்; குரூபி. அவ னைப் பார்ப்பதற்கே அவளுக்குப் பயங்கரமாய் இருந்தது. ஆயினும், அன்றிரவு படுத்து நித்தி ரை செய்வதற்கு அவனைத் தவிர அவளுக்கு இடம் கொடுப்பார் எவரும் இல்லாததால் அவள் அவன் பின்னே செல்ல வேண்டி நேர்ந்தது.

அவளும் கிழவனும் அவ் வீதிக்கப்பால் சிறிது தூரம் நடந்து சென்றனர். கிராமத்துக்கு வெளியில் ஒரு தனி இடத்தில் இருந்த ஒரு சிறு குடிசைக்குள் அக்கிழவன் நுழைந்தான். அது தான் அவனுடைய வாசஸ்தலம். பிராஸ்கோ வியா வெளியிலேயே நின்றுகொண்டு இருந்தாள்.

உள் நுழைந்த கிழவன் அவனைக் காட்டிலும் விகாரரூபமுடைய ஒரு கிழவியுடன் இரகசியமாக ஏதோ பேசியவண்ணம் வெளியில் வந்தான். அக் கிழவி அவனுடைய மனைவி என்பதை அப்பெண் பின்பு தெரிந்து கொண்டாள்.

சூரியன் அஸ்தமித்து விட்டான். எங்கும் இருள் பரவிற்று. அக்கிராமத்தில் சந்தடியும் அடங்கிவந்தது. குடிசைக்குப் புறம்பே நின்றிருந்த அப்பெண்ணைக் கிழவி வெகு அன்புடன் அழைத்துக்கொண்டு உள்ளே போனாள். கிழவனும் அவளைப் பின்தொடர்ந்தான்.

சிறிது நேரம் சென்றதும் கிழவன் குடிசையின் வெளிக்கதவை மூடி உட்புறம் தாளிட்டுக் கொண்டான். அக்குடிசையுள் எரிந்து கொண்டிருந்த ஒரு சிறு விளக்கொளியில் பிராஸ்கோவியா கிழவனும் கிழவியும் தன்னை உற்றுநோக்குவதைக் கவனித்தாள். அவள் உள்ளத்தில் திகில் புகுந்தது. அவளை அவர்கள் என்ன செய்வார்களோ என்று அஞ்சி நடுநடுங்கினாள். அவ்வாபத்தினின்றும் தன்னைக் காக்கும்படி அவள் கடவுளை நோக்கித் துதித்தாள்.

கிழவி:—பெண்ணே! நீ எங்கிருந்து வருகிறாய். எங்கே போகிறாய்?

பிராஸ்கோவியா:—நான் வசிப்பது இஷிம் கிராமம்? பீட்டர்ஸ் பரோவுக்குப் போகிறேன்.

கிழவி:—வழிச் செலவிற்குப் போதுமான பணம் உன்னிடத்தில் இருக்கிறது அல்லவா.

பிராஸ்கோவியா:—எண்பது கோபெக்ஸ் நாணயங்களே என்னிடம் இருக்கின்றன.

கிழவி:—நீ பொய் சொல்லுகிறாய். அவ்வளவு தூரம் போகிறவளுக்கு எண்பது கோபெக்ஸ் எம்மாத்திரம். நீ இன்னும் அதிகம் கொண்டு வந்து இருப்பாய் என்று நினைக்கிறேன்.

கிழவன்:—நானும் அப்படியே நினைக்கிறேன்.

அவள் தன்னிடம் எண்பது கோபெக்ஸ் நாணயங்களைத் தவிர வேறொன்றும் கிடையாது என்று பன்முறை சொல்லியும் அவர்கள் நம்பவேயில்லை. அதனால், அப்பெண் மனம் நொந்து அழுதாள். இதுவரையில் பொய் சொல்லாதவளைப் பொய் சொன்னாள் என்று அவர்கள் சொன்னதைக் கேட்க அவளுடைய உள்ளம் பதைத்தது.

அவர்கள் அப்பெண்ணுக்கு நன்றாக வேக வைத்த உருளைக் கிழங்குகள் நாலைந்து உண்ணக் கொடுத்து, "நேரமாகிறது. நீ நெடுந்தூரம் நடந்து வந்ததால் மிகவும் களைப்பு அடைந்து இருப்பாய். படுத்துக் கொண்டு நித்திரை செய்" என்று சொல்லி அந்த அறையில் தென்மேற்கு மூலையில் இருந்த ஒரு திண்ணையைச் சுட்டிக் காண்பித்தனர்.

பிராஸ்கோவியா அவர்கள் காண்பித்த இடத்தை அடைந்து தன் மேற் போர்வையைக் கழற்றி அதில் அநுமதிச் சீட்டையும் பணப் பையையும் வைத்தாள். சிறிது நேரம் வெகு பக்தியுடன் கடவுளை நோக்கித் துதித்த பிறகு படுத்துத் தூங்கலானாள்.

ஒரு மணி நேரம் ஆயிற்று. அப்பெண் உறங்கி விட்டாள் என்று நினைத்த அக்கிழவனும் கிழவியும் மெதுவாகப் பின்வருமாறு பேசினர்:—

கிழவி:—இவளிடம் பணம் அதிகம் இருக்கும்.

கிழவன்:—இவள் கழுத்தைச் சுற்றிலும் ஒரு பட்டுக் கயிறு இருப்பதையும் அக்கயிற்றில் சிறு பையொன்று தொங்குவதையும் நான் பார்த்தேன். அப்பையில் அவள் பணம் வைத்திருக்கிறாள் என்று ஊகிக்கிறேன்.

கிழவி:—சரி! இவள் இங்கு வந்ததை எவரும் கவனிக்கவில்லையே.

கிழவன்:—இல்லை. இவள் இன்னும் இக்கிராமத்தில் இருப்பதாக எவரும் நினைக்க மாட்டார்கள்.

கிழவி, "சரிதான்" என்று கூறியவண்ணம் அப்பெண் படுத்துக் கொண்டிருந்த திண்ணையை அணுகி அவள் கழுத்தைத் தடவினாள். அவளுக்கு ஒன்றும் அகப்படவில்லை. இதுகாறும்

தூங்காமல் அவ்விருவரும் இரகசியம் பேசிக் கொள்வதை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த பிராஸ்கோவியா, கிழவியின் கைகளைப் பிடித்த வண்ணம், "பாட்டி என்னை ஒன்றும் செய்யாதே. என்னிடம் எண்பது கோபெக்ஸ் நாணயங்களைத் தவிர வேறு ஒன்றும் இல்லை," என்று மன்றாடினாள்.

கிழவி பதில் சொல்லாமல் அப்பெண்ணின் கழுத்தைத் தடவுவதை விட்டு அவள் பக்கத்தில் இருந்த மேற் போர்வையைப் பிரித்துப் பார்த்து அதில் வைத்திருந்த அநுமதிச் சீட்டையும் பணப் பையையும் எடுத்துக் கொண்டாள். அவளுடைய உடல் முழுவதையும் சோதித்துப் பார்த்தாள். அப்பெண் கூறியது உண்மையாய் இருக்கலாம் என்று நம்பினாள்; அவள் தன் கைக்கு அகப்பட்ட பையில் இருந்து பணத்தைத் தரையில் கொட்டி எண்ணினாள். எண்பது கோபெக்ஸ் நாணயங்களே இருந்தன.

*   *   *

கிழவனும் கிழவியும் பிறகு அப்பெண் படுத்திருந்த இடத்தை விட்டு நீங்கினர். ஏறக்குறைய இரண்டு மணி நேரம் வரையில் அவளுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. அவ்விருவரும் தன்னை என்ன செய்வார்களோ என்று அவள் அஞ்சினாள்.

*   *   *

பிராஸ்கோவியாவுக்கு எங்கிருந்தோ தூக்கம் வந்து விட்டது. அவள் தன்னையே மறந்து அயர்ந்து தூங்கினாள். பொழுதும் விடிந்தது. அவள் விழித்துக் கொள்ளவில்லை. அதனால், கிழவி அவளைத் தட்டி எழுப்பினாள். அவள் தன் கண்களைத் திறந்து எழுந்து உட்கார்ந்தாள்.

கிழவி அவளைப் பார்த்து நகைத்து, "குழந்தாய்! நீ நேற்றிரவு நாங்கள் உன்னை ஏதாவது செய்து விடுவோம் என்று பயந்து விட்டாய் அல்லவா?" என்று கேட்டாள்.

பிராஸ்கோவியா:— ஆம்.

கிழவி:— நாங்கள் உன்னை அவ்வாறு சோதித்ததற்குக் காரணம் யாதென்று நீ அறிந்திருந்தால் திகில் அடைந்து இருக்க மாட்டாய்.

பிராஸ்கோவியா:—சோதித்ததற்குக் காரணம் யாது?

கிழவி:—நாங்கள் உன்னைத் திருடி என்று சந்தேகித்து உன்னைச் சோதித்துப் பார்த்தோம்.

பிராஸ்கோவியா:—"அப்படியா! நான் ஏன் திருடுகிறேன் பாட்டி! திருடுகிறவர்களைக் கடவுள் தண்டிப்பார் என்று எனக்கு நன்றாகத்தெரியுமே."

* * *

சிறிது நேரத்திற்குப்பிறகு பிராஸ்கோவியா கிழவி அளித்த உணவை உண்டு அக்கிராமத்தை விட்டுப்புறப்பட்டாள். போகிற வழியில் தன் பை

கனத்திருப்பதைக் கவனித்தாள். ஒரு தனி இடத்தில் நின்று அப்பையில் இருந்த நாணயங்களை

எண்ணினுள். எண்பது நாணயங்கள் நூற்றிரு பதாகப் பெருகி இருப்பதைக் கண்டாள். 'யாவும் கடவுள் செயல்' என்று நினைத்துக்கொண்டே வழி நடந்தாள்; பல கிராமங்களைக் கடந்து சென்றுள்.

ஒரு நாள் அதிகாலையில் அவள் ஒரு கிராமத்தை விட்டுப் புறப்பட்டுக் கொஞ்ச தூரம் சென்றுள். அப்போது அக்கிராமத்தில் உள்ள நாய்கள் ஒன்று சேர்ந்து குலைத்துக்கொண்டே அவளைப் பின்தொடர்ந்தன. அவள் அவைகளுக்குப் பயந்து ஓடினுள்; தன் கையில் இருந்த கழியால் அவைகளை அடித்துத் துரத்த முயன்றுள். அந்நாய்களுள் ஒன்று அவளுடைய ஆடையின் ஒரு பாகத்தைத் தன் பற்களால் பிடித்து இழுத்தது. ஓடுகையில் ஆடையைப் பிடித்து இழுத்ததால் அவள் முகங் குப்புற விழுந்தாள். அவ்வழியே சென்ற குடியானவன் ஒருவன் அவள்மீது பரிதாபம் கொண்டு அந்த நாய்களை அடித்துத் துரத்தி விட்டு அவளைத் தூக்கிவிட்டான்.

* * *

அத்தியாயம் 9.

கன்னி மடம்.

பிராஸ்கோவியா இஷிம் கிராமத்தை விட்டுப் புறப்பட்டு மூன்று மாத காலம் சென்றது. பனிக் காலம் வந்திருத்தது. பூமி முழுவதையும் உறை

பனி மூடிக்கொண்டது. அது சமயம் எவரும் கால் நடையாகப் பிரயாணம் செய்வது கூடாத காரியம்.

அவளுடைய வரலாற்றைப் பிறர் கூறக் கேட்ட சில வண்டிக்காரர் அவளைத் தமது வண்டியில் ஏற்றிக் கொண்டு செல்லச் சம்மதித்தனர். அவள் குளிர் தாங்க மாட்டாமல் வருந்துவதைக் கண்டு அவர்கள் தங்களிடம் இருந்த ஆட்டுமயிர்க் கம்பளத்தை அவளுக்குக் கொடுத்து உதவினுர்கள்.

சில நாட்களுக்குள்ளாக அவர்கள் "எகேதெரின் பரோ" என்னும் தங்கள் நகரத்தை அடைந்தார்கள். பிராஸ்கோவியா தான் ஏறிவந்த வண்டியில் இருந்து இறங்கி வண்டிக்காரரைப் பார்த்து, "ஐயன்மீர்! நீங்கள் ஒரே மனத்தினராய் எனக்குச் செய்த உதவியை நான் என் உயிர் உள்ள மட்டும் மறக்கவே மாட்டேன். ஏழைப் பெண்ணுகிய என் மீது இரக்கங் கொண்டு என்னை வெகு பட்சமுடன் உபசரித்த உங்களில் ஒவ்வொருவரையும் கடவுள் ஆசீர்வதிப்பாராக!" என்று வந்தனம் கூறினுள். அவர்கள் தங்கள் வண்டியை ஓட்டிக் கொண்டு போனுர்கள்.

* * *

வண்டிக்காரரை விட்டுப் பிரிந்த பிராஸ்கோவியா தன் அயர்வை நீக்கிக் கொள்ள அந்நகரத்தில் உள்ள போஜன சாலை ஒன்றை அடைந்து வயிருரப் புசித்து அங்குச் சிறிது நேரம் உட்

காந்திருந்தாள். அப்போஜன சாலையை நடத்தி வந்தவனுடைய மனைவி அவளிடம் வந்து காலப் போக்கின் நிமித்தம் பற்பல விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தாள். தெய்வாதீனமாய் அப் பட்டணத்தில் உள்ள சில சீமாட்டிகளைப் பற்றி அவள் புகழ்ந்துரையாட நேர்ந்தது.

அவள் புகழ்ந்து பேசிவந்த சீமாட்டிகளுடைய குணவிசேஷங்களை வெகு கவனமாய்க் கேட்டுவந்த பிராஸ்கோவியா, "அம்மா! அவர்களுள் தருமசிந்தையுடையவள் யாவள்?" என்று அவளைக் கேட்டாள்.

அவள்:—குழந்தாய்! நான் கூறிவந்த சீமாட்டிகள் யாவரும் தம்மைத்தாம் புகழ்ந்து கொள்வதிலும் சுயநலம் பாராட்டுவதிலும் நிகரற்றவர்கள். ஆனால், அவர்களைக் காட்டிலும் அந்தஸ்திலும் ஐசுவரியத்திலும் ஒரு படி உயர்ந்தவள் மாடேம் மிலின் (Madame Milin) என்னும் சீமாட்டியே ஆவள். கடவுள் பக்தியிலும் தருமசிந்தையிலும் அவள் தலைசிறந்து விளங்குகிறாள். எத்தனையோ ஏழைக் குடும்பங்கள் அவளுடைய ஆதரவில் இருந்து வருகின்றன.

* * *

பிராஸ்கோவியா அம்மாதரசியை மறு தினம் கண்டு பேசவேண்டும் என்று தன் மனத்துள் தீர்மானித்துக் கொண்டாள். பொழுது சாய்ந்த

தும் அவள் போஜன சாலையை விடுத்து அருகில் இருந்த கோயிலுக்குச் சென்று வெகு பக்தியுடன் கடவுளைத் துதித்தாள்.

அங்கு வந்திருந்தோர் அனைவரும் அவளுடைய கிழிந்ததும் அழுக்குப் படிந்ததுமான ஆடையையும் பக்தி வைராக்கியத்தையும் கூர்ந்து கவனித்தார்கள். அவர்களுள் ஒருத்தி அப் பெண்ணை அணுகி வெகு பட்சமுடன் "நீ யாவள்? எங்கிருந்து வருகிறாய்? எவ்விடத்திற்குப் போகிறாய்?" என்று வினவினள்.

பிராஸ்கோவியா அவளுக்குத் தன் வரலாற்றைச் சுருக்கமாகச் சொல்லி முடித்து, "அம்மா! மாடேம் மிலின் என்னும் சீமாட்டியார் இருக்கும் இடம் உமக்குத் தெரியுமோ? என்று கேட்டாள்.

அதற்கு அவள், "என்னுடன் வந்தால் காண்பிக்கிறேன்" என்று சொல்லி அவளை அழைத்துக்கொண்டு போனாள். இருவரும் சிறிது தூரம் நடந்து சென்றனர்.

அந்த அந்நிய ஸ்திரீ, போகிற வழியில், ஒரு மாளிகையைச் சுட்டிக் காண்பித்து, "குழந்தாய்! இதுதான் மாடேம் மிலின் அம்மையாருடைய இருப்பிடம். அங்கு உன்னை எவரும் ஏற்றுக் கொள்ளாவிடில் நீ என் வீட்டில் தங்கி இருக்கலாம்" என்று உரைத்து அந்த மாளிகையை நோக்கி நடந்தாள். பிராஸ்கோவியா அவளைப் பின் தொடர்ந்தாள்.

இருவரும் அம்மாளிகையை அடைந்தனர். பிராஸ்கோவியா அங்கு நின்றிருந்த வாயில் காப்பாளரில் ஒருவனைப் பார்த்து, "ஐயா! மாடேம் மிலின் அம்மையாரைக் காண விரும்புகிறேன்" என்றாள்.

அந்த வாயில் காப்பாளனும் இதர பணியாட்களும் வெகு ஆச்சரியத்துடன் அவ்வந்நிய ஸ்திரீயையும் பிராஸ்கோவியாவையும் மாறிமாறிப் பார்த்தவண்ணம் இருந்தார்கள். அப் பெண் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவேயில்லை.

இறுதியில், கோயிலில் இருந்து தன்னுடன் பேசிக்கொண்டு வந்தவளே மாடேம் மிலின் என்பதை ஒருவாறு உணர்ந்துகொண்ட பிராஸ்கோவியா அந்த அந்நிய ஸ்திரீயைப் புகழத் தலைப்பட்டாள்; 'யாவும் ஈசன் செயல்!' என்றாள்.

மாடேம் மிலின் என்னும் அவ்வந்நிய ஸ்திரீ பிராஸ்கோவியாவைச் சில காலம் தன்னுடன் இருத்திக் கொண்டு அவளுக்கு வேண்டிய உபசரணைகள் செய்து வந்தாள். இதுவரையில் எழுத்துவாசனை அறியாதிருந்த அப்பெண் அவ்விடத்தில் சிரத்தையுடன் கல்வி கற்க ஆரம்பித்தாள். பனிக்கால முழுவதும் அவள் அம்மாளிகையிலேயே தங்கி இருக்க நேரிட்டது. அவள் பிறந்தது முதல் இத்துணைச் சுகபோகங்களை அநுபவித்ததில்லை. ஆயினும், அவ்வுத்தமப் பெண்

இஷிம் கிராமத்தில் தன் தாய்தந்தையர்படும் அவஸ்தையை அரைக்கணமும் மறந்திலள்.

ஒருநாள் மாலை மாடேம் மிலின் பிராஸ்கோவியாவிடம் வெகு உல்லாசமாகப் பேசிக்கொண்டிருக்கையில், அப்பெண் அவளைப் பார்த்து, "அம்மா! நான் இவ்விடத்திலேயே தங்கி இருந்தால் என் தாய்தந்தையர் கதி என்னவாவது! ஆதலால், தாங்கள் எனக்கு உத்தரவு கொடுத்தால் இப்போதே பீட்டர்ஸ்பரோ நகரத்துக்குப் புறப்பட்டுப் போகிறேன்" என்றாள்.

மாடேம் மிலின்:—நீ இப்போது புறப்பட்டுப்போக நினைப்பது மூடத்தனம். பனிக்காலம் முடிந்து வசந்தகாலம் ஆரம்பமாகட்டும்.

*　　　*　　　*

வசந்த காலம் வந்தது. மாடேம் மிலின், வியாபார விஷயமாய் நிஸினி நௌகோராட் (Nizhni Novgorod) நகரத்துக்குப் போக உத்தேசித்திருந்த தனக்கு அறிமுகமான ஒரு பலத்த வியாபாரியைத் தன் முன் வரவழைத்தாள். அவனிடம் பிராஸ்கோவியாவைப் பற்றிய விஷயங்களை எடுத்துச் சொல்லி, ..."ஆதலால், நீர் இவளை உம்மோடு அழைத்துக் கொண்டு போய் நிஸினி நௌகோராட் நகரத்தில் சேர்த்துவிட வேண்டியது" என்று கேட்டுக்கொண்டாள். அவன் "சரி" என்றான்.

உதாரத்துவம் மிகுந்து விளங்கிய அச்சீமாட்டி பிராஸ்கோவியாவுக்கு வேண்டிய தின்பண்டங் களும் பணமும் நிஸினி நௌகொராட் நகரத்தில் வசித்துவரும் தன் நண்பர் சிலருக்குச் சிபார்சு கடிதங்களும் கொடுத்து, "குழந்தாய்! நீ கைக் கொண்ட காரியம் சித்திபெற முழுமுதற் கடவுள் உனக்கு அருள்புரிவார்" என்று அவளை வாழ்த்தி வியாபாரியுடன் கூட்டி அனுப்பினுள்.

வியாபாரி அப்பெண்ணை அழைத்துக்கொண்டு நாலைந்து கிராமங்களின் வழியே சென்று காமா (Khama) நதிக் கரையை அடைந்தான். அவன் துர் அதிர்ஷ்டவசமாய், அங்கு வியாதியுற்று வருந் தினுன். அவ்விடத்தில் பிராஸ்கோவியாவுக்கு உதவிசெய்ய முன் வருவார் எவரும் இலராயினர்.

அவ்விடத்தில் இருந்து நிஸினி நௌகொ ராட் நகரத்துக்குப் போகவேண்டுமானுல் காமா நதி யைக் கடந்து செல்லவேண்டும். பிராஸ்கோவியா அந்த வியாபாரியை எதிர்பார்க்காமல் அங்குப் பிரயாணிகளை ஏற்றிச் செல்ல இருந்த ஒரு பட கில் ஏறிக்கொண்டாள்.

படகுக்காரர் படகைச் சுக்கான் உதவியால் தள்ளிக்கொண்டு போயினர். நடு ஆற்றில் படகு போய்க் கொண்டு இருக்கையில் திடீரென்று சுழல் காற்று அடிக்க ஆரம்பித்தது. படகு காற்றில் கட் டுக்கு அடங்காமல் இங்கும் அலைந்து அங்கும் கரை

யை நோக்கி ஓடிற்று. அது கரையில் மோதிக் கொண்டால் பிரயாணிகளுக்கு ஆபத்து நேரிடும் என்பதை உணர்ந்த படகுக்காரர் படகைத் தங்கள் பலங்கொண்டமட்டும் வேறு மார்க்கமாகத் திருப்ப முயன்றனர். அம்முயற்சியில் பிராஸ்கோவியா வையும் இன்னும் இரண்டு பிரயாணிகளையும் தெரியாமல் தண்ணீரில் தள்ளிவிட்டனர்.

அவர்கள் விழுந்த சத்தத்தைக் கேட்ட படகுக்காரரில் ஒருவன் உடனே தண்ணீரில் குதித்து அம்மூவரையும் காப்பாற்றினன். அப்படகில் மறைவிடம் இல்லாததால் பிராஸ்கோவியா நனைந்த உடைகளை மாற்றிக் கொள்ள முடியாமல் நிஸினி நௌகொராட் நகரத்தை அடையும் வரையில் குளிரால் வருந்தினள்.

படகும் கரை சேர்ந்தது. நிஸினி நௌகொராட் நகரத்தைக் கண்டதும் அவள் உள்ளம் களிப்படைந்தது; அவள் காலதாமதம் செய்யாமல் படகினின்றும் குதித்துக் கரையை அடைந்தாள். அவளுடைய கண்களுக்கு நேரே கல்லெறி தூரத்தில் கோயில் ஒன்று இருப்பதைப் பார்த்தாள்.

அவள் தங்குவதற்கு இடம் தேடுவதைத் தவிர்த்து, வழக்கம்போல் கடவுளைத் துதிக்க அக்கோயிலை நோக்கி நடந்தாள். அப்போது சூரியன் அஸ்தமிக்கும் சமயமாய் இருந்தது. அவள் வெகு

சீக்கிரத்தில் கோயிலை அடைந்தாள். அங்கு எவருடம் இல்லை. ஆனால் அக்கோயிலுக்குப் பின்புறத்தில் சில பெண்கள் பாடுவது அவளுடைய காதில் விழுந்தது.

"இது கன்னிமடம் (Nunnery) என்று நினைக்கிறேன். இங்கிருக்கும் தவப் பெண்கள் அனைவரும் புண்ணிய சீலிகளே. இவர்கள் இடைவிடாமல் இறைவனின் இணையடிகளைத் தொழுத வண்ணம் இருக்கிறார்கள். என் காரியம் நிறைவேறினால் நானும் கன்னிமடம் சேர்ந்து கடவுள் பக்தியில் ஈடுபட்டுக் காலங்கழிப்பேன்" என்று அவள் தனக்குள் தானே பேசிக் கொண்டு அக் கோயிலைச் சுற்றித் திரிந்த வண்ணம் இருந்தாள்.

பிறகு, அவள் கோயிலுள் நுழைந்து, அங்கோர் இடத்தில் அமர்ந்து தேவனைத் துதித்தாள். சிறிது நேரம் சென்றது. சூரியன் அஸ்தமித்து விட்டான். எங்கும் இருள் பரவ ஆரம்பித்தது.

கன்னி மடத்திலிருந்து தவப்பெண் ஒருத்தி அவள் உட்காந்திருந்த இடத்தை அணுகி, "அம்மா, இருட்டிவிட்டபடியால் இத்தேவாலயத்தின் கதவுகளைச் சாத்தித் தாளிட வேண்டும்" என்றாள்.

பிராஸ்கோவியா உடனே எழுந்திருந்து, "தாயே! நான் ஓர் ஏழைப் பெண். பீட்டர்ஸ் பரோ நகரத்துக்குப் போக வேண்டியவள். இன்றிரவு

மாத்திரம் கன்னிமடத்தில் தங்கி இருக்கத் தாங்கள் எனக்கு அநுமதி தரவேண்டும். வெளியில் போ ஜன சாலைகளில் தங்கியிருக்க எனக்குக் கிஞ்சித்தும் பிரியம் இல்லை.” என்றாள்.

தவப்பெண்:— அம்மா! இதுவரையில் நாங்கள் எந்த வழிப்போக்கருக்கும் தங்க இடம் கொடுத்ததில்லை. ஆனால், எங்கள் தலைவியைத் தாங்கள் நேரில் கண்டு பேசினால் அந்தம்மாள் உம்முடைய வேண்டுகோளுக்கு இசைவள் என்று நம்புகிறேன்.

பிராஸ்கோவியா:— அவளுக்குத் தன்னிடம் இருந்த பணப்பையைக் காண்பித்து, “எகேதரின் பரோ நகரத்தில் உள்ள என் நண்பர் சிலர் எனக்கு வழிச்செலவிற்கு வேண்டிய பணம் கொடுத்து உதவினர். இன்றிரவு மாத்திரம் இம்மடத்தில் தங்க எனக்கு இடங்கொடுத்தால் போதும்” என்றார்.

பிராஸ்கோவியாவின் வணக்க மொழிகளைக் கேட்ட அத் தவப்பெண் ஆனந்தங்கொண்டு அவளைக் கன்னிமடத்துக்கு அழைத்தேகினாள். அங்கிருந்த தவப்பெண்கள் அனைவரும் அவளைச் சூழ்ந்துகொண்டு, “அம்மா, நீ யார்? நீ இங்கு வருவானேன்?” என்று கேட்டனர்.

பிராஸ்கோவியா மெல்லிய குரலில் நிதானமாகவும் வெகு தாழ்மையுடனும் தன் வரலாற்றை

அவர்களுக்கு ஆதியோடந்தமாகச் சொல்லி முடித்தாள். கன்னிமடத் தலைவியும் அங்கு வந்து அவள் கூறுவதை மிக்க சாவதானமுடன் கேட்டுக்கொண்டிருந்தாள்.

* * *

கன்னிமடத்தலைவி:—குழந்தாய்! இம்மடத்தில் வசிக்கும் தவப்பெண்கள் யாவரினும் நீ மேம்பட்டவள் எனத் தகுந்தவள். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்னும் மூத்தோர் வார்த்தைதனைக் கடைபிடித் தொழுகும் நீயே கடவுளுக்கு உகந்தவள். அவர் உன்னை ஆசீர்வதிக்காமல் போகார்......சற்குணாலயம் என விளங்கும் உனக்குத் தங்க இடங்கொடாதவர் பாவிகள் எனப்படுவர். உனக்குப் பிரியம் உள்ள மட்டும் நீ இங்கே இருப்பதற்கு நான் ஆக்ஷேபிக்கவே மாட்டேன்.

பிராஸ்கோவியா கன்னிமடத்தலைவியின் குளிர்ந்த மொழிகளைக் கேட்டதும் அளவிடக் கூடாத ஆனந்தம் அடைந்தாள். "யாவும் ஈசன் செயல்" என்று வாய்விட்டுக் கூவினாள்.

* * *

அன்பு மயமாய் விளங்கிய அக் கன்னிமடத்தில் தங்கிய பிராஸ்கோவியா சுரங்கண்டு வருந்தினாள். வைத்தியர் அவள் பிழைக்கமாட்டாள் என்று கைவிட்டு விட்டனர். ஆனால், அவள் மட்டும், "கடவுள் என்னை இப்போது தமது திருவடி

நீழலில் சேர்த்துக் கொள்ள மாட்டார். என்னுடைய காரியம் முடிவு பெறவேண்டியதாய் இருக்கின்றது" என்று அவ்வப்போது சொல்லிக் கொண்டு இருந்தாள்.

அவள் தேக சௌக்கியம் அடைந்தாள். ஆனால், அவள் பூரண சொஸ்தம் அடைய நெடுங்காலம் சென்றது.

*　　　*　　　*

நிஸினி நௌகொராட் நகரத்தில் இருந்து பீட்டர்ஸ் பரோவுக்கு ஏறக்குறைய எழுநூறு கல் தூரம் இருக்கும். பிராஸ்கோவியா இன்னும் எழுநூறு கல் தூரம் பிரயாணம் செய்ய வேண்டியதாய் இருந்தது. ஆயினும், அவள் சலிப்படையவே இல்லை.

*　　　*　　　*

வேனிற்காலமும் முடிந்தது. பிராஸ்கோவியா கன்னி மடத்திலிருந்து புறப்பட ஆயத்தப் பட்டாள். தவப் பெண்களும் மடத்தலைவியும் அவளை விட்டுப் பிரிய மனம் இல்லாமல் இன்னும் சிலகாலம் அங்குத் தங்கிப் போகச் சொன்னார்கள். அவள் அதற்கு இசையவில்லை.

கன்னிமடத்தலைவி:—குழந்தாய்! இனி நாங்கள் நீ இவ்விடத்திலிருந்து போவதைத் தடுக்க மாட்டோம். நீ உன் தேகத்தை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள். மிக்க பலஹீனம் அடைந்திருக்கிறாய். நீ போகிற வழியில் மாஸ்கோ (Moscow) என்னும் நகரம் ஒன்று உண்டு. அங்கு என் ஆப்த

சிநேகி ஒருத்தி இருக்கிறாள். நான் அவளுக்குக் கடிதம் ஒன்று கொடுக்கிறேன். நீ பீட்டர்ஸ்பரோ நகரத்தை அடைய வேண்டிய சௌகரியங்களை அவள் ஏற்படுத்துவாள்.

பிராஸ்கோவியா:—அம்மா! இவ்விடத்திற்கும் மாஸ்கோ நகரத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும்.

கன்னிமடத்தலைவி:—சுமார் மூன்னூறு கல் தூரம் இருக்கும்.

அத்தியாயம்—10.

நிர்ணயம் நிறைவேறல் - முடிவு.

"முயற்சி மெய் வருந்தக் கூலி தரும்" என்பது பெரியோர் வார்த்தை. அது வீண் வார்த்தை அன்று. பிராஸ்கோவியா தன் முயற்சிக்கு ஏற்ற பலனை அடைந்தாள். அவள் கடவுளை நம்பினாள்; முழு மனத்துடன் நம்பினாள். தன்னால் கூடிய பிரயத்தனமும் செய்தாள். அவர் அவளைக் கைவிடவில்லை.

* * *

கடைசியில், பிராஸ்கோவியா பீட்டர்ஸ்பரோ நகரத்தைச் சேர்ந்தாள். அந்தப் பட்டணத்தில் இருந்த ஒரு தனிகருடைய மனைவியின் உதவியைக் கொண்டு மேரி என்னும் ருஷிய நாட்டுச் சக்கரவர்த்தினியைக் கண்டு பேசும் பாக்கியம் பெற்றாள்.

மேரி சக்கரவர்த்தினியார் முதலாம் பவுல் என்றும் ருஷிய ஸாரின் தாயார் ஆவர். அவ்வம்மையார் தரும சிந்தையும் 'மென்மதுர' வாக்கும் உடையவர். இடம்பா வாழ்க்கையில் பிரியப்படாதவர். பிறர் படும் துன்பத்தைக் காண சகியாதவர்.

இத்தகைய ஒப்பு உயர்வு அற்ற உத்தமியின் முன் பிராஸ்கோவியா போய் நின்ருள். "ஈசா! நான் உன் மீது வைத்திருக்கும் நம்பிக்கை வீண் போகவில்லை." என்று தன் மனத்துள் நினைத்துக் கொண்டாள்.

சக்கரவர்த்தினியார் தம் எதிரில் நின்ற அவ் வுத்தமப் பெண்ணைத் தம்முடைய பிரத்தியேகமான அறைக்கு அழைத்துக் கொண்டு போய், "குழந்தாய்! நீ ருஷிய ஸாரைக் காணவேண்டும் என்பதற்குக் காரணம் யாது?" என்று கேட்டார்.

அவள் மெதுவாகவும் மிக்க வணக்கத்தோடும் தன் விருத்தாந்தத்தை ஆதியோடு அந்தமாகக் கூறி முடித்தாள். அவள் கூறி வந்ததை மிக்க விருப்புடன் செவி சாய்த்துக் கேட்டு வந்த சக்கரவர்த்தினியார் "சுய நலம் பாராட்டாது தாய் தந்தையரின் துயரத்தை நீக்க விரும்பி ஏறக்குறைய இரண்டாயிரம் கல் தூரத்தில் உள்ள இஷிம் கிராமத்தில் இருந்து இந்நகரை நோக்கி வந்த உன் மனவன்மை எவரும் மெச்சத் தகுந்தது. இவ்வுலக முடிவு வரைவில் உன் பெயர் நிலைத்து நிற்கக் கூடியது. உனக்கு ஒப்பாவார் இதுவரையில் பிறந்தது இல்லை; இனிமேல் பிறப்

பதும் கடினம். இரண்டொரு நாட்களுக்குப்பிறகு நீ இங்கு வந்து பார்க்கவேண்டும். இதற்கு இடையில் உன்னுடைய வரலாற்றை என் புதல்வனும் முதலாம் பவுலுக்கு எடுத்துச் சொல்லி, உன்னுடைய தாய் தந்தையரை மீட்க வழி தேடுகிறேன். நீ எதற்கும் அஞ்சவேண்டா. நீ நாடிவந்த காரியம் சித்தி பெறுமோ, பெருதோ என்று சந்தேகிக்காதே." என்று கூறி அவருடைய செலவுக்கு மூன்னூறு ரபுல்ஸ் (Roubles) நாணயங்களைக் கொடுத்து அனுப்பினுள்.

*   *   *

இரண்டு நாட்களுக்குப் பிறகு அரண்மனைக்கு வந்த பிராஸ்கோவியாவை மேரி சக்கரவர்த்தினி, முதலாம் பவுலும் அவன் மனைவி எலிஸபெத்தும் தனியே உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருக்கும் சமயம் பார்த்து அவர்களிடம் அழைத்துக் கொண்டு போனர். அதற்கு முன்னதாகவே அவளுடைய வரலாற்றை மேரி சக்கரவர்த்தினியார் மூலமாய்க் கேட்டுத் தெரிந்துகொண்டிருந்த வாரும் அவன் மனைவியும் அவளை ஓர் ஆசனத்தில் இருத்தி அவளுடன் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து, கடைசியில், "நாங்கள் கூடிய சீக்கிரம் உன் தந்தையைக் குறித்துப் புனர்விசாரணை செய்து அவரை விடுதலை செய்கிறோம்" என்று உரைத்து அவளுக்கு இனமாக ஐயாயிரம் ரபுல்ஸ் நாணயங்களைக் கொடுத்தனர்.

பிராஸ்கோவியாவின் குணவிசேஷங்களைக் கேட்டறிந்த அரண்மனையில் உள்ள அரசகுல

ஸ்திரீகள் அனைவரும் அவளுடைய நட்பைப் பெற விரும்பினர். "இவள் முகம் தேஜஸ் பெற்று விளங்குகிறது. இவள் நற்குலத்தில் அவதரித்த வளாய் இருக்கவேண்டும்" என்றனர்.

அந்த ஸ்திரீகளுள் இருவர் அவளை ஸாரின் கொலுமண்டபத்துக்கு அழைத்தேகினர்; அவன் வீற்றிருக்கும் சிங்காதனத்தை அவளுக்குக் காண்பித்தனர்.

அதைக் கண்டதும் அவள் அதற்கு அருகில் அசையாது நின்று, "ஸார் வீற்றிருக்கும் சிம்மாசனம் இதுவா? நான் ஸைபீரியாவில் இருக்கும்போது இதற்கு அஞ்சி நடுங்கினேன்." என்று ஆச்சரியத்துடன் கூறினாள். பழைய எண்ணங்கள் அவளுடைய உள்ளத்தைக் கவர்ந்தன. அவள் சிம்மாசனத்திற்கு எதிரில் வந்து முழங்கால் படியிட்டு அதைத்தடவி முத்தம் இட்டவண்ணம், "கடவுளின் கருணையை என்னென்று உரைப்பது என் மனமகிழ்ச்சிக்குக் காரண பூதரர்ய் விளங்கும் ருஷிய ஸாரையும் அவர் வீற்றிருக்கும் இச் சிம்மாசனத்தையும் அவருடைய குலத்தோரையும் கடவுள் ஆசீர்வதிப்பாராக!" என்றாள். எழுந்து நின்றாள். அவள் நெடுநேரம் அவ்விடத்தைவிட்டு அகலவே இல்லை.

* * *

அவள் ஸைபீரியாவை விட்டுப் புறப்படும் போது அவளுக்கு வழி விட்ட குற்றவாளிகள்

இருவரையும் மறக்கவில்லை. அவர்களுடைய விடுதலையைக் குறித்தும் ஸாரிடம் அவள் மன்ருடினுள்.

ஸார் அவளுடைய மனோதைரியத்தையும், விடாமுயற்சியையும் சுயநலமின்மையையும், தாய் தந்தையர்மீது அவளுக்கு இருந்த அளவற்ற அன்பையும் கண்டு வியந்தான். ஒரு வாரத்திற்குள் அவளுடைய வேண்டுகோளின்படி லோ பவுலாப்பையும், இதர இரண்டு குற்றவாளிகளையும் மன்னித்து விடுதலை செய்தான்.

அதை அறிந்த பிராஸ்கோவியா அக மகிழ்ச்சி அடைந்தாள். ஆனந்தக் கூத்து ஆடினுள். ஸாரை அபரிமிதமாகப் புகழ்ந்து பேசத் தலைப்பட்டாள்.

"நான் என்னைப் பெற்று வளர்த்த தாய் தந்தையருக்குரிய கடனைச் செய்து முடித்தேன். அவர்களும் விடுதலை அடைந்து ஸைபீரியாவை விட்டுப் புறப்பட்டு இங்கு வந்து விடப் போகிருர்கள். இனி நான் என் காலத்தைக் கடவுளைத் துதிப்பதில் கழித்துவிடப் போகிறேன்." என்று தீர்மானித்துக் கொண்டு பிராஸ்கோவியா, பீட்டர்ஸ்பரோ நகரத்தை விட்டு நிஸினி நௌகொராட்டை அடைந்து அங்கு இருந்த கன்னி மடத்தில்,தான் முன் பிரார்த்தித்துக்கொண்டபடி,தவப் பெண் ஆயினள்.

ஸைபீரியாவை விட்டு வந்த அவளுடைய தாய் தந்தையர் அவள் அங்கு இருப்பதைத் தெரிந்து கொண்டு அவளைக் காண விரைந்து வந்தனர். அன்பின் பெருக்கால் அவளைக் கட்டித் தழுவிக் கொண்டு, அவளுடைய முகத்திலும் கன்னத்திலும் மாறி மாறி முத்தம் ஈந்தனர்.

"ஒரு பிரதியுபகாரமும் எதிர்பாராமல் உன் தேகசுகத்தையும் கெடுத்துக் கொண்டு எங்கள் இருவரையும் காத்த நீயே எங்களுக்குக் கடவுள்" என்றனர்.

பிராஸ்கோவியா அவ்விருவரையும் நோக்கி, "உங்களை விடுவித்தவள் நான் அல்லள், யாவும் உணரவல்ல கடவுளே ஆவர். அவர் நம் விஷயத்தில் செய்த நன்மைகளுக்கு அளவே இல்லை. அவருக்கு நன்றி கூறவே நான் இத் தவக்கோலம் பூண்டு அவரை ஸ்மரணை செய்தவண்ணம் இருக்கிறேன். நான் உம்மிருவருடைய உத்தரவின்றி இக்கோலம் பூண்டதற்கு நீங்கள் என்னை மன்னித்தருள வேண்டும்" என்றாள்.

இருவரும் "மன்னித்தோம். உன்னை மனப்பூர்த்தியாக மன்னித்தோம்" என்றனர். அனைவரும் சந்தோஷ சாகரத்தில் அழுந்தினர்.

முற்றுப் பெற்றது.

Printed at the B. N. Press, Mount Road, Madras.

எமது பதிப்புகள்

1.	நீதி கதா சாகரம் ...	0	5	0
2.	செந்தமிழ் நூன் மாலை ...	0	10	0
3.	விவேக விளக்கக் கதைகள் ...	0	5	0
4.	உலகம் புகழும் உத்தம மாதர் முதல் பகுதி ...	0	3	0
5.	ஷை இரண்டாம் பகுதி ...	0	3	0
6.	குருக்ஷேத்திர யுத்தம் ...	0	12	0
7.	பிராஸ் கோவியா அல்லது போற்றல் வாய்ந்த பெண்மணி ...	0	5	0
8.	நவீன சித்திரக் கதைகள் (தெலுங்கு)	0	6	0
9.	சுத்தி ரத்னாகரம் (தெலுங்கு) ...	0	14	0
10.	பகவத் கீதை வசனம்—வரகவி-திரு- அ. சுப்ரமண்ய பாரதி எழுதியது	0	3	0
11.	விசித்திர விநோதக் கதைகள் ...	0	3	0

பாடசாலை மாணவருக்கு வேண்டிய புத்தகங்கள் யாவும் விலை சரசமாய் எம்மிடம் கிடைக்கும்.

K. முனிசாமி நாயுடு & கம்பெனி,
புத்தக வியாபாரிகள்,
286, அப்பா பில்டிங்ஸ், எஸ்பிளனேட், சென்னை.